விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 09 சனிக்கிழமை (24.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வடக்கின் பட்ஜெட் 2017 ஏகமனதாக நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் (பட்ஜெட்) உறுப்பினர்கள் அனைவரினதும் அங்கீகாரத்துடன எதிர்ப்பின்றி நேற்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 69 ஆவது அமர்வு கடந்த 14ஆம் திகதி வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது வடக்கு மாகாண முதலமைச்சரும் வடக்கு மாகாண நிதி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார். ஐந்து நாட்களாக இடம் பெற்று வந்த பட்ஜெட் மீதான விவாதம் நேற்றைய தினம் முடிவுற்றுள்ளது. இறுதியாக நேற்று கல்வி

23 பக்கம் பார்க்க

3 ஆயிரத்து 349 ஏக்கர் வயல் நிலங்களை முல்லைத்தீவில் சிங்களவர்கள் ஆக்கிரமிப்பு

வடக்கு சபையில் உறுப்பினர் ரவிகரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் 3 ஆயிரத்து 349 ஏக்கர் வயல் நிலங்களை சிங்களவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர் என்ற புதிய தகவலை வடக்கு மாகாண சபையில் உறுப்பினர் ரவிகரன் வெளிப்படுத்தியுள்ளார். வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சின் வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதம் நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடி அமைச்சர், முல்லைத்தீவில் 40 ஆயிரம் தமிழ் குடும்பங்கள் வாழும் பகுதிகளில் ஏழு குளங்களில் நன்னீர் மீன் குஞ்சு விட்டுள்ளார். இதே அமைச்சர் 3 ஆயிரத்து 33 சிங்கள குடும்பங்கள் வாழும்

24 பக்கம் பார்க்க

மாகாண அதிகாரங்களைப் பறிக்கும் மத்தியின் அபிவிருத்திச் சட்டமூலத்தை



வடக்கு சபை நிராகரிப்பு

விசேட தீர்மானமாக முன்மொழிந்தார் விக்கி

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசினால் கொண்டுவரப்படவுள்ள அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இந்த சட்ட மூலத்தினூடாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படும் அதேவேளை, அதிகாரப்பகிர்வுக்கு புறம்பாக இந்த சட்டமூலம் காணப்படுவதாக கூறப்பட்டே மேற்படி நிராகரிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விசேட தீர்மானமாக சபையில் கொண்டு வந்திருந்தார்.

23 பக்கம் பார்க்க

ஏ9 நெடுஞ்சாலையில் 117 பேர் பலி!

(கொழும்பு)

2016ஆம் ஆண்டு நாட்டில் இடம் பெற்ற அதிக பட்ச விபத்துக்கள், யாழ்ப்பாணம், கண்டி இடையிலான ஏ9 நெடுஞ்சாலையிலேயே இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏ9 நெடுஞ்சாலையில் இந்த ஆண்டு இடம்பெற்ற விபத்துக்களில்

23 பக்கம் பார்க்க

வாள்வெட்டு; இளைஞன் காயம்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவிற்கு உட்பட்ட பாலிநகர் கிராமத்தில் மதுபோதையில் வாள், கொட்டான்களுடன் நீண்ட நேரமாக வீதியில் நின்று வீதியில் செல்லும் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த நபர்கள் நடத்திய வாள் வீச்சில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

23 பக்கம் பார்க்க

மாகாண அதிகாரங்களை மத்திய அரசு பறிக்காது

முதலமைச்சர்களிடம் பிரதமர் உறுதி

(கொழும்பு)

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தினூடாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாது என மாகாண முதலமைச்ச

04 பக்கம் பார்க்க

'ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்'

குறைகேள் அலுவலகம் யாழில்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் முதன்முறையாக ஜனாதிபதியிடம் சொல்லுங்கள் என்ற அலுவலகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதன்மூலம் பொதுமக்களின் பிரச்சினைகளை நேரடியாக தீர்த்து வைப்பதற்கு சிறந்த களம் கிடைத்துள்ளது என வடமாகாண ஆளுநர் ரெஜினோல் கூரே தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

ஜனாதிபதி புதிதாக பதவியேற்ற பின்பு பொதுமக்களின் குறைகள்

23 பக்கம் பார்க்க

விமான பாகம் கடலில் மீட்பு

23 பக்கம் பார்க்க

பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை

(யாழ்ப்பாணம்)

பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை என்பதே வட மாகாண சபையின் உறுதியான தீர்மானம். இந்நிலையில் மாகாணத்தில் வீடு தேவைப்படும் மக்களுக்கு வீடுகளை பெற்றுக் கொடுக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசி வருகின்றார்கள் என வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். வட மாகாண சபை

24 பக்கம் பார்க்க

14 பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மரண அறிவித்தல்

சின்னையா நாகபூரணம்

பிறப்பு 1937 07 19

இறப்பு 2016 12 21

பெரியார் பகுதி, பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னையா நாகபூரணம் அவர்கள் 21.12.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், சிவகாம சுந்தரி, சிவானந்த நடராசா, சிவஈஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவஞானம், சிவபாலன் மற்றும் சிவரஞ்சனி, சிவராசன் (ஆசிரியர் கிளிநொச்சி மகாவித்தியாலயம்), சிவரூபன், சிவசங்கர் ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானபாஸ்கரன், இந்திரா, நவரத்தினம், ஸ்ரீகாந்தன், குமுதா, கிருஷ்ணரூபி, உசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.12.2016 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியார் பகுதி
பொன்னம்பலம் வீதி
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

- குடும்பத்தினர்

(C-6843)

கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி 21 பவுண் தங்க நகை கொள்ளை

(கரணவாய்)

வயோதிபத் தம்பதியினரின் கழுத்தில் கத்தியினை வைத்து மிரட்டி அவர்களிடமிருந்த இருபத்தொரு பவுண் தங்க நகைகள் நான்கு பேர் கொண்ட கொள்ளையர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் பருத்தித்துறை - யாழ்ப்பாண வீதியில் உள்ள சிறுப்பிட்டி எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வீட்டில் நடைபெற்றுள்ளது.

அதிகாலை வேளையில் வீட்டினை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் உறக்கத்தில் இருந்த 65 வயதுடைய வயோதிப தம்பதியினரின் கழுத்தில் கத்தியினை வைத்து மிரட்டி அவர்களிடமிருந்த இருபத்தொரு பவுண் நிறையுடைய தங்க நகைகள், சீடி பிளேயர் ஒன்று, டோச் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அச்சுவேலிப் பொலிஸாருடன் நெல்லியடி குற்றத் தடுப்பு பொலிஸாரும் இணைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். எனினும் நேற்று இரவு வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை குடத்தனைப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகள் அபகரிக்கப்பட்டு நான்கு நாட்களுக்குள் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமையால் மக்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

A/L 3 passes உடன் கணினி பட்டம்
BIT Bachelor of Information Technology
கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து
By- T.Tharmmendra(BIT,MCSE,MBCS)
2nd Upper உட்பட இதுவரை 50 இற்கும் மேற்பட்டோர் பட்டம் பெற்றுள்ளனர்
Register at www.bit.lk Group classes start from 31-12-2016 at 1.30 pm, Kandarmadam, Jaffna. Contact : 0779785796
(7140)

கண்ணீர் அஞ்சலி

தம்பிப்பிள்ளை காசிநாதன்

பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமான தேவ சகாயம் ஜெயகுமார் அவர்களின் அன்பு மாமனார் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை சமூகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

(7140)

காணி விற்பனை

A-9 வீதி நுணாவில் சந்திக்கு அருகே மட்டுவில் வீதியில் (200m) 10 பரப்புக் காணி பிரித்தும் விற்கப்படும்.

தொடர்பு :
077 873 0129

(7136)

கோழி விற்பனை நிலையம்

உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் (கல்பேட்) சுகாதார முறைப்படி சுத்தம் செய்யப்பட்டு தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன்,நல்லூர்

(7129)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விற்பனைக்கு

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு புறோயிலர் 1Kg-450/= அத்துடன் ஊர்ச்சேவல், பேரன்ஸ், கல்பேட், முட்டை என்பன விற்பனை செய்யப்படும்.

தாசன் பாம்
158/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(7149)

கண்ணீர் அஞ்சலி

திருமதி
ஆறுமுகம் சபாநாயகிஅம்மாள்

எமது கல்லூரியின் ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினரும் உதவி அதிபருமான சரவணமுத்து அகிலன் அவர்களது மாமியார் திருமதி ஆறுமுகம் சபாநாயகிஅம்மாள் 23.12.2016 நேற்று இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(ச-6841)

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
க.பொ.த (சா.த)-2016 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

We Serve

அண்மைக்காலமாக தமிழ் மொழி பேசும் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் உயர் தரத்தில் விஞ்ஞான துறைக்கு செல்வது குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்ததே. இக்குறையைப் போக்கி விஞ்ஞான துறையை உயர் கல்வியில் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கருத்தாலோசனைகளுடன் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 நடாத்தவுள்ளது. இத்தகவல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருடாக பாடசாலைகளுக்கு அறி விக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றி பயனடைய க.பொ.த (சா/த)-2016 மாணவர்களை அழைக்கின்றோம்.

இடம் :- நெல்லியடி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்
காலம் :- 24.12.2016 காலை 9.00 தொடக்கம் 12.30 வரை

WHERE THERE'S A NEED THERE'S A LION

தொடர்புகளுக்கு:-
லயன் க.கமலேஸ்வரன்
மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில் வங்கியும்)
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
தொலைபேசி:-077 604 7195
lionkamales@gmail.com

(ஐ)

பகிரங்க ஏலம் - யாழ்.மாநகரசபை பெரியகடை மரக்கறிச்சந்தை

யாழ்.மாநகர சபையின் ஆளுகையின் கீழுள்ள பெரியகடை மரக்கறிச் சந்தையை 2017 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம்.

இடம் : நானாவித இறைவரிப்பகுதி, யாழ்.மாநகர சபை.
காலம் : 2016.12.29 ஆம் திகதி, காலை 10.30
ஆரம்ப கேள்வி தொகை : 1,643,500.00 (வரி நீங்கலாக)

தேவையான விபரத்தை அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.பொ.வாகீசன்,
ஆணையாளர்,
மாநகரசபை.

(ச-6842)

6 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

நுகேகொடை கம் சஹா சந்தியில் நேற்று பிற்பகல் 6 வாகனங் கள் ஒன்று டன் ஒன்று மோதி விபத்துக்குள்ளா னதில், படுகாயமடை ந்த மூவர் களுபோ வில வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். கார் உள்ளி ட்ட வாகனங்களே இவ் வாறு விபத்துக்குள்ளா கியுள்ளன. (இ-3-10)

வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்தும்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஒய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251

உத்தேச அபிவிருத்தி விசேட ஒழுங்கு சட்டமூலத்தை ஊவா சபை நிராகரிப்பு

மத்திய அரசு அதிர்ச்சி

அரசாங்கத்தின் உத்தேச அபிவிருத்தி விசேட ஒழுங்கு சட்டமூலத்தை ஊவா மாகாண சபை அங்கீகரிக்கவில்லை.

ஊவா மாகாண சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்காக குறித்த சட்டமூலம் மத்திய அரசால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஊவா மாகாண சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற வாக்கெடுப்பில் குறித்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 9 பேரும், எதிராக 13 பேரும் வாக்களித்தனர். இதனால், மேலதிக 4 வாக்குகளால் குறித்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் மாகாண முதலமைச்சர் நடுநிலைமை வகித்திருந்தார். அதேவேளை, ஊவா மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் கைகளுக்குள் சென்றிருந்தது.

அது பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. ஊவா மாகாண முதலமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து பேச முடியாது

பிரதமர் ரணில் திருப்பதியில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து, ஆந்திராவில் பேச முடியாது என திருப்பதி வெங்கடாசலபதியை தரிசித்து விட்டுத் திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தரிசனம் முடித்து திரும்பிய பிரதமர் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இலங்கை மக்கள் அனைவரும் நலமுடன் இருக்க வேண்டி பிரார்த்தனை செய்தேன் என்று தெரிவித்தார்.

இதன்போது, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, இது ஆந்திர மாநிலம், தமிழக மீனவர்கள் குறித்து இங்கே பேச இயலாது. மேலும், இது தொடர்பில் எமது அமைச்சரே பதிலளிப்பார் என்று கூறிவிட்டுச் சென்றார்.

முன்னதாக பிரதமர், அவரது மனைவி, அமைச்சர்களான டீ.எம்.சுவாமிநாதன், பழனி திகாம்பரம் உள்ளிட்ட குழுவினர், திருப்பதி கோவிலில் சுவாமி சரிதனம் செய்தனர். கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் கருஷ்ணமூர்த்தி, தலைமை செயல் அலுவலர் சாம்பசிவராவ், பிரதமர் உள்ளிட்ட குழுவினரை வரவேற்றனர். பிரதமரின் வருகையையொட்டி திருப்பதிஏழுமலையான் விமான நிலையம் முதல் ஏழுமலையான் கோயில் வரை 2,000 பொலிஸார், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

அமைச்சர் அமரவீர வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பதாக மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக மீன்பிடி அமைச்சரை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன பிரதிநிதிகள் கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் இதுதொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சுமார் 500 படகுகள் வரை இது வரை காலமும் பதிவு செய்யப்படாதுள்ளன. அப்படகுகள் அனைத்தும் விசேட திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

இந்திய றோலர் படகுகளின் வருகை முழுமையாக தடை செய்யப்பட வேண்டும். இலங்கைக்குள் அத்துமீறி நுழைந்து கடற்படையால் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் மீள ஒப்படைக்கப்படக்கூடாது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவுகளும் விபத்துக்களுக்கான உதவித் திட்டங்களும் வழங்கப்பட வேண்டும், அதாவது பாதுகாப்பு அங்கிகள், வலைகள் என்பன வழங்கப்பட வேண்டும்.

தடைசெய்யப்பட்ட கடற்றொழிலுக்கு நட்டஈடு வழங்கப்பட்டு மாற்றுத்தொழில் வழங்கப்படவேண்டும், காரைநகரில் இருந்து சுண்டிக்குளம் வரையான வீதி புனரமைக்கப்பட வேண்டும். குருநகர் இறங்கு துறை, பருத்தித்துறை துறைமுகம் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அமைச்சரிடம் முன்வைத்திருந்தோம்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் விரைவாக நிவர்த்தி செய்யக்கூடிய வேலைகளை அடுத்த வருடம் ஆரம்பிப்பதாகவும் ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் விரைவில் செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். அத்துடன் சம்மேளனத்துக்கான அலுவலகத்தினை புனரமைப்பதற்காக உடனடியாக நிதி ஒதுக்கீட்டினையும் செய்துள்ளார் என தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் மீன்பிடி அமைச்சர், அமைச்சின் செயலாளர், நீரியல் வளத்துறை அதிகாரிகள், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளன தலைவர் வேதவச் செல்வம், செயலாளர் செ. அன்னராசா, பொருளாளர் பொ.மகேஸ், நிர்வாக உறுப்பினர் செ, வர்ணகுலசிங்கம், வடமராட்சி கடற்றொழில் சமாச உபதலைவர் ஆர். மதியழகன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சுத்தியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுமேலைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தேப்பம், வாயில் மணம், காலையில் மந்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

இதலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

சிவில் விமான சேவையில் இளையோருக்கு வாய்ப்பு

எதிர்காலத்தில் சிவில் விமான போக்குவரத்து சேவை அதிகாரசபையின் பதவிகளுக்கு தொழில்நுட்ப அறிவுடைய இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ள இருப்பதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இலங்கையில் நாளுக்கு நாள் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்படுவதாகவும், விரிவடைகின்ற விமான சேவை துறைக்கு இளைஞர், யுவதிகள் அவசியம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிவில் விமான சேவை அதிகாரசபைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இன்று சிவில் விமான சேவை அதிகாரசபையின் உயர் பதவிகளில் தொழில்நுட்ப அறிவு பெற்றிருக்கும் அதிகாரிகளின் பற்றாக்குறையானது, அதிகாரசபை எதிர்நோக்கியுள்ள பிரதான சவால் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சிவில் விமான சேவை அதிகாரசபைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட விமான போக்குவரத்து பரிசோதகர்கள 13 பேர் மற்றும் உதவி முகாமையாளர்கள் 12 பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (இ-3-10)

வரலாற்றில் முதல் தடவையாக கென்றி பளுதூக்கும் கருவியை இயக்கும் பெண்

இலங்கை துறைமுக அதிகார சபை வரலாற்றில் முதல் தடவையாக கென்றி கிரேன் (Gantry Crane) பளுதூக்கும் கருவியை இயக்கக் கூடிய பெண் பணியாளரை அறிமுகம் செய்யவுள்ளது.

கொழும்பு துறைமுக அதிகார சபையின் மஹாபொல பயிற்சி நிறுவகத்தில் ஆரம்பமான கப்பல் போக்குவரத்துத் துறை சார்ந்த மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் அரஜுன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

மகளிர் குழுவொன்று கென்றிபளுதூக்கும் இயந்திரங்களை இயக்குவது பற்றி துறைமுக அதிகார சபையின் மஹாபொல பயிற்சி நிறுவகத்தில் பயிற்சி பெற்று வருகிறது. இந்தப் பெண்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி பயிற்சியை பூர்த்தி செய்து வெளியேறுகிறார்கள். இவர்கள் துறைமுக அதிகார சபையில் இணைத்துக் கொள்ளப்படஉள்ளதாக அமைச்சர்மேலும் தெரிவித்தார். (இ-3-10)

செல்சியின் ஒஸ்காரை 60 மில்லியன் பவுண் கொடுத்து வாங்கும் சீன கழகம்

பிரேசில் நாட்டின் முன்னணி நடுக்கள வீரரான ஒஸ்காரை செல்சியிடம் இருந்து 60 மில்லியன் பவுண் கொடுத்து சீனாவின் முன்னணி கால்பந்து கழகம் வாங்குகிறது.

இங்கிலாந்து நாட்டின் முன்னணி கால் பந்து கழக அணி செல்சி. இந்த அணிக்காக 25 வயதான பிரேசில் அணியின் முன் னணி நடுக்கள ஆட்டக்காரர் ஒஸ்கார் விளையாடி வருகிறார். இவரை சீனாவின் முன்னணி கழக அணியான ஷாங்காய் எஸ்.ஜ.பி.ஜி. அணி வாங்க விருப்பம் தெரிவித்தது.

இதற்கான பேச்சுவார்த்தை நல்லபடியாக முடிந்துள்ளது. இன்னும் சில நாட்களில் ஷாங்காய் 60 மில்லியன் பவுண் கொடுத்து ஒஸ்காரை ஒப்பந்தம் செய்யும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து ஒஸ்கார் வெளியிட்டுள்ள வீடியோ அறிக்கையில் "ஷாங்காய் எஸ்.ஜ. பி.ஜி. அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட இருப்பது சந்தோஷம். புதிய குடும்பமான சீனாவுடன் இணைய இருப்பது எனக்கு மிக வும் முக்கியமான நாளாக இருக்கப் போகி றது" என்றார்.

ஏற்கெனவே, சீன சுப்பர் லீக் கழகங்கள் 400 மில்லியன் டொலர்கள் அளவில் வெளிநாட்டு முன்னணி வீரர்களை ஒப் பந்தம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

தல தோனியை மறந்த அஸ்வினை வறுத்தெடுத்த ரசிகர்கள்

இந்திய அணி யின் சுழற்பந்து வீச்சாளரான அஸ் வின் தோனிக்கு நன்றி தெரிவிக்காத தால் தோனி ரசிகர் கள் சிலர் அவரிடம் கேட்ட கேள்விகள் தான் தற்போது சமூக வலைத்தளங் களில் வைரலாக பரவி வருகிறது.

இந்திய கிரிக் கெட் அணியின் நட் சத்திர சுழற்பந்து வீச்சாளரான அஸ் வினுக்கு இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக் கான விருது, சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருது என இரு ஐசிசி விருதுகள் கிடைத்துள்ளன.

ஆண்டின் சிற ந்த கிரிக்கெட் வீரர் விருதை பெறும் 3ஆவது இந்திய வீரர் அஸ்வின் ஆவார். இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டில் ராகுல் டிராவிட்டும் 2010ஆம் ஆண் டில் சச்சின் டெண் டுல்கரும் இந்த விருதைப் பெற்றுள் ளனர்.

இது குறித்து அஸ்வின் கூறுகையில், இரட்டை விருது கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. சச்சின், டிராவிட்டுக்கு பின்னர் தனக்கு இந்த விருது கிடைத்திருப்பது மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது என கூறியுள்ளார்.

இந்த விருது பெற்றதற்கு ஏராளமானோருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருப்பதாக கூறியுள்ளார். இந்த விருதை தனது குடும்பத்தாருக்கு அர்ப்பணிப்பதாகவும் மற்றும் சக வீரர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன் என கூறியுள்ளார்.

தோனி ஓய்வு பெற்ற பிறகு ஏற்பட்ட வெற்றிடங்களை தாண்டி இளம் அணித் தலைவரான ஹோலி தலைமையில் வலுவான அணியாக உருவெடுத்திருக்கிறோம். இந்திய அணி இப்போது சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்றார்.

அதுமட்டுமின்றி டுவிட்டரிலும் இதேபோன்று தன்னுடைய விருதை ஹோலி, கும்ப்ளே மற்றும் குடும்பத்தாருக்கு அர்ப்பணிப்ப தாக கூறியுள்ளார்.

இதில் தோனியின் பெயரை குறிப்பிடுவதற்கு மறந்து விட்டார் போல் தெரிகிறது. அவ்வளவுதான் தோனியின் ரசிகர்கள் அஸ்வினை டுவிட்டரில் சில காரசாரமான கேள்விகளை எல்லாம் கேட்டுள்ளனர். அதில் ஒருவர் நன்றி மறப்பது நன்றன்று என்ற ரீதியிலும் டுவிட் செய்துள்ளார். . (க)

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கிண்ணம்

சம்பியனானது இந்தியா

19 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ண கிரிக் கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை அணியை வெற்றி கொண்டு இந்திய அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

கொழும்பு ஆர்.பிரேமதாச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்த போட்டியில் இந்திய அணி முதலில் துடுப் பெடுத்தாடியது.

இதனடிப்படையில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 273 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பில் சப்மான் கில் 70 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் ரன்சிக மற்றும் ஜெயவிக்ரம தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இந்நிலையில் 274 என்ற ஓட்ட இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.4 ஓவர்கள் நிறைவில் 239 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கை அணி சார்பில் கெல்லி 62 ஓட்டங்களையும் கமிந்து மெண்டிஸ் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்திய அணி சார்பில் அபிசேக் சர்மா 4 விக்கட்டுகளை கைப்பற்றினார். (க)

இவன் யார் என்று தெரிகின்றதா?

ஜெயசூரியவின் இளமைக்கால புகைப்படம்

இலங்கை அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரரான ஜெயசூரிய அண்மையில் இந்தியா சென்றுள்ளார். அங்கு சென்ற அவரி டம் இந்திய அணி குறித்து கேள்வி கேட் கப்பட்டது.

அதற்கு அவர், விராட் ஹோலியின் தலை மையிலான இந்திய அணி சிறப்பாக செயற்பட்டு வருகிறது.

யார் யாருக்கு எப்போது பந்து வீச வர வழைக்க வேண்டும் என்று நன்கு அறிந்து வைத்துள்ளார் என்று புகழாரம் சூட்டினார்.

இந்நிலையில் இந்தியா சென்ற போது தூரன் எங்கு எல்லாம் சென்றேன் என்பது தொடர்பான புகைப் படங்களை ஜெயசூரிய தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

அதுமட்டுமின்றி டீகாரில் உள்ள புத்த கையா கோவிலுக்கு சென்ற அவர் அங் குள்ளவர்களுடன் புகைப்படம் எடுத்துள்ளார்.

அதை அவர் தன்னுடைய வாழ்வில் மிகவும் முக்கியமான நேரம் இது என உருக்கமாக குறிப்பிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து சிறு வயதில் தான் வாங்கிய கிண் ணங்களையும் பதிவேற்றம் செய்துள்ளார். (க)

மாகாண அதிகாரங்களை...

ர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற முக்கிய சந்திப்பில் தென், மேல், கிழக்கு, ஊவா மாகாண முதலமைச்சர்கள் பங்கேற் றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் ஊடாக செய்ய எதிர்பார்க்கும் விடயங்கள் குறித்து இதன்போது மாகாண முதலமைச்சர்களுக்கு பிரதமரால் விளக்க மளிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தினூடாக மாகாண சபைகளின் அதிகாரங்கள் மத்திய அரசாங் கத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாது. தேசிய அபிவிருத்திக்காக மாகாண சபைகளை வினைத்திறன் மிக்கதாக பங்கேற்கச் செய்வதற்காக இந்த நடவடிக்கை முன்னெ டுக்கப்படுகின்றதாக பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும் மாகாண சபைகளுக்கு உரித் தான எந்த விடயங்களுக்கும் இந்த சட்ட மூலத்தினூடாக நடைபெறாது என பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு மாகாண முதலமைச்சர் களின் யோசனைக்கு ஏற்றவாறான திருத் தங்களை நாடாளுமன்ற குழுநிலையில் முன்வைக்க சந்தர்ப்பம் இருப்பதாகவும் இதன்போது பிரதமர் தெரிவித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்பு குறித்து நனக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக் கப்படவில்லை என்றும், அதனால்தான் பங்கேற்கவில்லை என்றும் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக் னேஸ்வரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (செ-11)

கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி
சின்னையா நாகபூரணம்
தோற்றம்:1937.07.19 மறைவு:2016.12.21
எமது பாடசாலையின் கணித பாட ஆசிரி யரான சி. சிவராஜா அவர்களின் அன்புத் தாயார் திருமதி சின்னையா நாகபூரணம் அவர்கள் 21.12.2016 அன்று அமரத்துவம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவிப்பதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.
(C-6844)
ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கிளி/கிளிநொச்சி ம.வி

உலகிலே மிகப்பெரிய மற்றும் சிறிய தேள்கள் இலங்கையில் கண்டுபிடிப்பு



உலகில் வாழும் மிகப் பெரிய மற்றும் மிகச் சிறிய தேள் இனங்கள் இலங்கையில் வாழ்வதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விலங்கு அறிவியல் திணைக்களத்தின் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

அத்துடன் இலங்கையில் வாழும் 18 வகை தேள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பேராதனை பல்கலைக் கழகத்தின் விலங்கு அறிவியல் திணைக்களத்தின் பேராசிரியர் கீத்சிறி ரணவன மற்றும் தேள்கள் தொடர்பில் உலகில் அதிக ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளரான செக் குடியரசை சேர்ந்த பென்டிசெக் கொவாரி என்பவரும் இந்த ஆய்வில் இணைந்துள்ளார்.

அதற்கமைய உலகில் வாழும் மிகப்பெரிய 9 அடி நளமான ஹெடோரொ டேரஸ் என்ற பெயருடைய தேள் மற்றும் ஒரு சென்ரிமீற்றர் அள்வு நீளமுடைய சாமுஸ் சரலதியேல் என்ற தேள் இனங்கள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளன.

மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது உறுதியாகி உள்ளதாக ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட சஞ்சீவ ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தேள்களை மக்கள் கொலை செய்கின்றமையினால் அந்த இனம் அழிவிற்கு முகம் கொடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

உள்ளம் எரியுதே

சிற்பி என்றொரு மானுடன் வாழ்ந்ததும்
சிறுகதைக் கலை ஓங்கி வளர்ந்ததும்
அற்புதம்என ஆன்றவர் போற்றிடும்
அழகிய கலைச் செல்வி மலர்ந்ததும்
பற்பலர் புகழ்ந் தேத்தி மகிழ்ந்திடப்
பாடல் கட்டுரை கவிதைகள் தந்ததும்
கற்பனைமிகு காவியம் ஆவதோ?
காலம் உந்தன் கதையை எழுதிடும்
என்னுடைக் கதை கட்டுரை பேச்சுக்கள்
இனியதென்று புகழ்ந் தெனைப் போற்றியே
சொன்ன சொற்களின் ஓசை மறையுமுன்
சோதி வானவன் பாதம் அடைந்தனை
நன்னெறி வழி காட்டிய சிற்பியே
நாங்கள் போற்றிடும் நாயகனே உனை
என்னமா புழிசெய்து இழந்தனம்
ஏங்கி இன்றென துள்ளம் எரியுதே!

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

மரண அறிவித்தல்

திரு. தம்பிப்பிள்ளை காசிநாதன்

(ஓய்வு பெற்ற பிரதிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை காசிநாதன் 22.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு--நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவசோதியின் பாசமிகு கணவரும் சுசீலன், கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகுமார் (ஆசிரியர்), தர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கமேந்தி, சிவசங்கர், சகாரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவதாசன், சிவநேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (26.12.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
தேவசகாயம் ஜெயகுமார்- மருமகன்
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
(முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
சுதுமலை தெற்கு, மானிப்பாய்

(ஏ-6839)

துயர் பகிர்வு

திருமதி பரமேஸ்வரி தங்கவேலாயுதம்

தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய நிலையை விரிவுரையாளர் ஜெயலட்சுமி-உதயகுமார் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி பரமேஸ்வரி தங்கவேலாயுதம் அவர்கள் 19.12.2016 திங்கட்கிழமை அன்று அகாலமரணமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசிய கல்வி சிறுவக யாழ். பிராந்திய நிலையை இணைப்பாளர்,விரிவுரையாளர்கள், 2015/2016 ஆசிரியர், மாணவர்கள்.

இராசி பலன்

24.12.2016
(மார்கழி 09, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 5.25 மணிவரை
சுவாதி பின்னிரவு 2.46 மணிவரை
சுபநேரம் 3.26-4.56 மணிவரை
இராகுகாலம் 9.26-10.56 மணிவரை
ஏகாதசி விரதம்
வளவன்

கேது செவ்	கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி		
சுக்			ராகு
சூரி	சனி புத	சந்	குரு

மீனம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

மேடம் வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலன் சீராகும், குடும்ப மகிழ்ச்சியுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும்.

இடபம் தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

மிதுனம் பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

கும்பம் அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புண்டு.

மகரம் தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், ஆர்வத்துடன் தொழிலில் ஈடுபாடு காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

தனுசு தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

விருச்சிகம் பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சயனசுகக் குறைவான நாள்.

துலாம் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

கன்னி பணியாளர் தொல்லை அகலும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

நடகம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

சிம்மம் சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட சிறப்படைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

கச்சதீவில் புதிய ஆலயம் நேற்று திறக்கப்பட்டது



கச்சதீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அந்தோனியார் ஆலயம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம், கடற்படை தளபதி, யாழப்பாணத்திற்கான இந்திய துணை தூதுவர் ஆர்.நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். கச்சதீவு பகுதியில் நிர்மாணிக்கப் பட்ட புதிய ஆலயத்தின் திறப்பு விழாவிற்கு இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து பக்தர்கள் வருகை தந்தனர்.

இதேவேளை, கச்சதீவில் இலங்கை அரசாங்கத்தால் புதிதாக கட்டப்பட்ட புனித அந்தோனியார் தேவாலய திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக இராமேஸ்வரம் தீவுப்பகுதியை சேர்ந்த பாதிரியார்கள், மீனவர்கள் உள்ளிட்ட பக்தர்கள் 82 பேர் கச்சதீவிற்கு வந்தனர். பங்கு தந்தைகள் சகாயராஜ், சந்தியா, ஜெகன் உட்பட 5 பங்கு தந்தைகளும், 5 கன்னியாஸ்திரிகளும், மீனவர்கள் சங்கத் தலைவர்கள் ஜேசு, எமரிட், போஸ், அல்போன்ஸ், சந்தியா மற்றும் மீனவர்கள் உட்பட 82 பேர் 3 படகுகளில் அந்தோனியார் ஆலயத்திற்கு நேற்று காலை வருகை தந்தனர். (இ-3-10)

மத்திய பேருந்து தரிப்பு நிலையத்தில் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தவும்

நெல்லியடி மத்திய பேருந்து தரிப்பு நிலையத்தில் குடிதண்ணீர் வசதியினை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் நெல்லியடி வர்த்தக சங்கத்திடம்கோரிக்கைஒன்றை முன்வைத்துள்ளனர். நெல்லியடி நகரில் உள்ள பேருந்து தரிப்பு நிலையத்தில் குடிநீர் வசதியோ, மலசலகூடவசதியோ எவையும்செய்யப்படவில்லை.

இது சம்பந்தமாக பல தரப்பினரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் குடிதண்ணீர் வசதியினை ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி மக்கள் வர்த்தக சங்கத்தினரை கோரியுள்ளனர். இக் கோரிக்கையினை ஏற்று சில தினங்களில்குடிதண்ணீர்வசதியினை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார். (இ-60)

நெல் உற்பத்தியில் வடக்கு தன்னிறைவு

(யாழ்ப்பாணம்)

நெல் உற்பத்தியில் வடக்கு மாகாணம் தன்னிறைவு கண்டுள்ளது என விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபை அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டில் 70,212 ஹெக்டயர் பரப்பில் 100,714 மெற்றிக்தொன் நெல்லும், 2015 ஆம் ஆண்டில் 105,735 ஹெக்டயர் பரப்பில் 324,294 மெற்றிக் தொன் நெல்லும் 2016 ஆம் ஆண்டில் 107,321 ஹெக்டயர் விஸ்தீரணத்தில் 300,662 மெற்றிக்தொன் நெல்லும் விளைவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இரணைமடுக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தவேலைகள் காரணமாகச் சிறுபோக நெற்செய்கை 2400 ஹெக்டயர் பரப்பளவிலேயே மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு, இந்த ஆண்டு போதிய மழைவீழ்ச்சி இன்மை காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் உற்பத்தி குறைவடைந்துள்ளது. இதனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு நெல் உற்பத்தி சிறிதளவால் குறைவடைந்துள்ளது. உற்பத்தியில் 170, 000 மெற்றிக் தொன் நெல் வடக்கு மாகாண மக்களின் நுகர்வுக்கும் போதுமானது. மிகை உற்பத்தி ஏனைய மாகாணங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பயிரிடப்படும் பரப்பளவிலும், உற்பத்தி அளவிலும் மிளகாய், சின்னவெங்காயம், பெரிய வெங்காயம், நிலக்கடலை, சோளம், பயறு போன்றவையும் 2014 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளன. இந்த ஆண்டு வடக்கின் நிலக்கடலை உற்பத்தி 7917 மெற்றிக் தொன்கள். தேசிய உற்பத்தியில் இது 37 சதவீதமாகும். இதற்கான பெருமை, மாவட்ட ரீதியாக நிலக்கடலை உற்பத்தியில் தொடர்ந்தும் முன்னணியில் நிற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் அதன் விவசாயிகளையுமே சாரும்.

இந்த ஆண்டு வடக்கில் 3585 மெற்றிக்தொன்கள் உழுந்து விளைவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்பொழுது இது குறைவானது. உழுந்து அதிகம் உற்பத்தி செய்யப்படும் வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு இறுதியில் பெய்த பெருமழை காரணமாகப் பயிரிடப்படும் நிலப்பரப்பு குறைவடைந்தமையே உற்பத்திக் குறைவுக்குக் காரணம் ஆகும். எனினும் இந்த உழுந்து உற்பத்தியும் தேசிய அளவில் 37 சதவீதம் பங்களிப்பை வழங்கியிருக்கிறது.

இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இன்று வடக்கு விவசாயத் துறை குறிப்பிட்டுச் சொல்லும்படியான பங்களிப்பை வழங்கிவருகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேசிய ரீதியில் 5.8 சதவீத பங்களிப்பையும் மாகாண ரீதியில் 15 சதவீத பங்களிப்பையும் வடக்கு விவசாயத் துறை வழங்கியுள்ளது.

மாகாண ரீதியில் 16.3 சதவீதம் வழங்கி முதலிடத்தில் உள்ள ஊவா மாகாணத்துக்கு அடுத்த இரண்டாவது இடத்தை எமது வடக்கு மாகாணம் பெற்றுள்ளது என்பதையும் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன் என தெரிவித்தார். (இ-4)

சாயி நிலையத்தில் கிறிஸ்மஸ் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயிஸேவாநிலையத்தின்கிறிஸ்மஸ் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 .30 மணிக்கு பிரசாந்திக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் யாழ்.ஆயரின் செயலாளர் வணபிதா எஸ். எம். சுதர்சன் அடிகளாரின் நத்தார் சிறப்புரையும் இடம் பெறும். (இ

நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற போது...

வடக்கிலுள்ள வைத்தியசாலைகள் அனைத்திலும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்த வேண்டும்

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகள் அனைத்திலும் கண்காணிப்பு கமராக்கள் பொறுத்த வேண்டும்எனவடக்குமாகாண சபையின் உறுப்பினர் அகிலதாஸ், வடக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளார். வட மாகாண சபையில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தின் போதே மேற்படி யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

வேலை நேரங்களில் தொலைபேசி பயன்பாடு அதிகரித்துள்ளது.அதனைக் கட்டுப்படுத்த இந் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டது. வெளிநோயாளர் பிரிவில் உள்ளவர்கள் ஒரு கையில் தொலைபேசியும் மறுகையில் தள்ளுவண்டியுமாக காணப்படுவதாக அமைச்சரின் க்வனத்திற்கு கொண்டு வந்தார்.

வேலை நேரங்களில் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. அதனையும் மீறி தொலைபேசி பயன்படுத்தினால் அதனை படம் எடுத்து தனக்குத் தருமாறும் அமைச்சர் கூறியதோடு சி.சி.ரி.வி பொருத்துவது பற்றி ஆலோசிக்கலாம் எனச் சபையில் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம் தொலைபேசி பாவனையை வைத்தியசாலைகளில் கட்டுப்படுத்தி நோயாளர்களுக்கு சிறந்த சேவை வழங்க முடியும்.

வைத்தியசாலைகளில் பொருத்தப்படும் கண்காணிப்பு கமரா பதிவுகளை ஒரு மாதத்திற்கு ஒரு தடவை பரிசோதித்து வேலை நேரத்தில் தொலைபேசி பாவிப்போர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். உயர்ந்த பட்ச நடவடிக்கையாக வேலை நீக்கம் கூட செய்யலாம் எனவும் இதன்போது சுகாதார அமைச்சருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.(இ-4)

மணடைதவு பிரதேச மககளின ஏறபாடடில கலாசார விழா நகழவு அணமையில மணடைதவு புனித பேதுருவானவர ஆலய முனறலல பங்குததநதை அருடபணி ம.டேவிட அடிகளார தலைமையல நடைபெறறது. இநத நகழவில பிரதம விருநதினராக வட மாகாண கலவி அமைசசர த.குருகுலராஜா, கௌரவ விருநதினரகளாக வட மாகாணசபை உறுபடினரகளான கே.என.வி.நதன கனகரததினம், இ.ஆனோலட ஆகியோரும கலநது கொணடு சிறபபிததிருநதனர. (படங்கள:பொ.சோமகா)

ஹந்துன்நெத்தி சபாநாயகருக்கு எழுதிய கடிதத்திற்கு பிரதமர் அலுவலகம் பதில்

(கொழும்பு)

கோப் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சில தவறான கருத்துக்கள் இணைக்கப்பட்டுள்ளதாக, பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை, முறிகள் விற்பனை மோசடி தொடர்பாக கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுபபினர் சுனில் ஹந்துன்நெத்தி சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு கடிதமொன்றை நேற்று முன்தினம் அனுப்பிவைத்திருந்தார்.

சுனில் ஹந்துன்நெத்தியின் கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கி பிணை முறிகள் கொடுக்கல் வாங்கல் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பான கண்காணிப்பு, பரிந்துரைகள் போன்ற விடயங்கள் குறித்த கோப் அறிக்கையில் அடங்கியுள்ளதால், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இது பற்றிய கருத்துக்களை கடந்த நவம்பர் 9 ஆம் திகதி சட்டமா அதிபரிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சட்டமா அதிபருக்கு குறித்த அறிக்கையை அனுப்புவதாக சபாநாயகருக்கு வாய்மொழி மூலம் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் சட்டமா அதிபர் கோரும் ஏனைய ஆவணங்களை சபாநாயகரின் அனுமதியுடன் வழங்குமாறு நவம்பர் 9 ஆம் திகதி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் பிரதமர் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளதுடன், விவாதத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் பிரதமரால் சபாநாயகரின் அதிகாரம் பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடாத சுனில் ஹந்துன்நெத்தி தற்போது அவ்வாறானதொரு கருத்தை கூற முற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமரினால், கோப் குழுவின் அறிக்கை சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுவது, சட்டபூர்வமானது.

தனது நிர்வாகத்தின் கீழ் சேவையாற்றும் ஊழியர் ஒருவர் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போது அது குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை வினவுவது, சாதாரண விடயம்.

இதன்மூலம் நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. கோப் குழுவின் தலைவர் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது, அவரது குழுவின் செயலாளரினால் கோப் அறிக்கை, கடந்த 8 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் பின்னரே எனவும், பிரதமர் அலுவலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3-10)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

வாடகைக்கு

K.K.S.வீதியில் (யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)தனியார் வகுப்புகள் அல்லது களஞ்சியசாலை அல்லது தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. (7131)

தொடர்புக்கு:-(072 246 9103)

விபத்தில் சிக்கிய குணபாலசிங்கம் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

மயிலிட்டி இடம்பெயர்ந்தோர் மீள் குடியேக்குழுவின் தலைவர் பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி குழுவின் தலைவரான அ.குணபாலசிங்கம் நேற்று பருத்தித்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்காக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதியில் உள்ள மந்திகைப் பகுதியில் சிறிய விபத்து ஒன்றில் சிக்கி காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-60)

திருவுடையாள் மலர் வெளியீடு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக கலாசார விழாவும் திருவுடையாள்-06 மலர் வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.கே. யோகநாதனும் கலந்து சிறப்பிப்பார். (இ-60)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: மூலம் உயரம்: 5'7" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/6656	பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: உத்தரம் கி.பா: 19செவ் 4 இல் உயரம்: 5' தகைமை/தொழில்:BSc தொ.இ: G/3038
பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: பூரம் கி.பா: 35சூரிசெவ் 4 இல் உயரம்: 5'5" தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில் தொ.இ: B/6657	பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி கி.பா: 28 உயரம்: 5' தகைமை/தொழில்:BA/அரசதொழில் எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும் தொ.இ: G/3051
பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: கேட்டை கி.பா: 18சூரிசெவ் 4 இல் உயரம்: 5'6" தகைமை/தொழில்:HND in English/ அரசதொழில் தொ.இ: B/6659	பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: விசாகம் கி.பா: 40 உயரம்: 5'2" தகைமை/தொழில்:BSc/அரச உயர் பதவி தொ.இ: G/3059
பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 23 உயரம்: 5'5" தகைமை/தொழில்:HND, ACCA லண்டன் PR தொ.இ: B/6660	பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: திருவோணம் கி.பா: 28செவ் 7 இல் உயரம்: 5'3" தகைமை/தொழில்:A/L/அரச வங்கியாளர் தொ.இ: G/3101

இவர்களுக்கு மணமகன் தேவை

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

திருமதி **அனந்தி சசிதரன்**

எமது அமைப்பின் அலுவலக கட்டட நிதிக்காக வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன் அவர்கள் பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2015 இல் ஒரு இலட்சமும் 2016 இல் இரண்டரை இலட்சமும் வழங்கியுள்ளார். அவர்களுக்கு எமது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.என்றென்றும் அவர்களின் சேவை நீடித்து நிலை பெற உழைக்கும் மக்கள் சார்பில் வாழ்த்துகின்றோம்.

கிராமிய உழைப்பாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.

(7132)

யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா? வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை

தொலைபேசியில் அழையுங்கள், அல்லது நேரில் வாருங்கள். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776
(தினமும் காலை 9.00-1.00)

வவுனியாவில் (024) 324 4444
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munnela Sangam)

21 கோடியே 60 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி

உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பு



மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் பிரிவுக்குட்பட்ட பன்னிரண்டு கமநல சேவை நிலையங்களின் கீழ் 2016 -2017 ஆம் ஆண் டுக்கான காலபோக நெற்செய்கையின் போது 14788 விவசா யிகள் 43214 ஏக்கரில் நெல் பயிரிட்டு ள்ளதாகவும் இவர்க ளுக்கு 21 கோடியே 60 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் தனிப்பட்ட வங் கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வரவிடப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், பாலசிங்கம் - தேவரதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 111 விவசாயிகளின் 3324. 50 ஏக்கரில் நெல் பயிரி ட்டுள்ள நிலையில் இவர் களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஒரு கோடியே 66 இலட்சத்து 22 ஆயி ரத்து 500 ரூபாவும்,

பாலம்பிட்டி கமநல சேவை நிலையத்தின் கீழ் 574 விவசாயிகள் 1680.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பன வாக 84 இலட்சத்து 3 ஆயிரத்து 750 ரூபாவும்,

உயிலங்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் 1429 விவசாயிகள் 4243.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பன வாக 2 கோடியே 12 இல ட்சத்து 18 ஆயிரத்து 750 ரூபாவும்,

ஆட்காட்டி வெளி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 2010 விவசாயிகள் 5944.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவ ர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 2 கோடியே 97 இலட்சத்து 23 ஆயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாவும்,

நானாட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 2473 விவசாயிகள் 7169.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 58 இலட்சத்து 46 ஆயிரத்து 250 ரூபாவும்,

முருங்கன் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 2129 விவசாயிகளின் 6401. 75 ஏக்கரில் நெல் பயிரி ட்டுள்ள நிலையில் இவர் களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 3 கோடியே 20 இலட்சத்து 8 ஆயிரத்து 750 ரூபாவும் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை பி.பி.பொற் கேணி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 1947 விவசாயிகளின் 50 96.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானி யக் கொடுப்பனவாக 2 கோடியே 54 இலட்சத்து 81 ஆயிரத்து 250 ரூபாவும்,

சிலாவத்துறை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 1348 விவசாயிக ளின் 3393.50 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானி யக் கொடுப்பனவாக ஒரு கோடியே 69 இலட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவும்,

இறுப்பைக் கடவை கம நல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 529 விவ சாயிகளின் 1995 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலை யில் இவர்களுக்கான உரமா னியக் கொடுப்பனவாக 9 கோடியே 97 ஆயிரத்து 5 ஆயிரம் ரூபாவும்,

விடத்தல்தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 456 விவசாயிகளின் 1810.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர களுக்கான உரமானியக் கொடுப்பனவாக 90 இல ட்சத்து 51 ஆயிரம் 250 ரூபாவும்,

இரணை இலுப்பைக்கு ளம் கமநல சேவை நிலை யத்தின் கீழ் உள்ள 783 விவசாயிகளின் 2149.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பன வாக ஒரு கோடியே 74 இலட்சத்து 6 ஆயிரத்து 250 ரூபாவும்,

மன்னார் தீவு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள விவசாயி ஒருவர் 5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவருக்கான உர மானியக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 14788 விவசாயி களின் 43214 ஏக்கர் நெல் பயிர்ச்செய்கைக்கு 21 கோடியே 60 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி, உர மானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வரவிட ப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத் தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்து ள்ளார். (2-15)

வவு.நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு 26 ஆம் திகதி வரை

(மல்லாவி)

வவுனியா நகர சபையி னால் எதிர் வரும் 2017 ஆம் ஆண்டு வவுனியா நகர சபை எல்லைக்குள் முன் னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்களுக்கு 6 கோடியே 83 இலட்சம் ரூபா நிதியை பய னபடுத்தவுள்ளதாகவும் இந்த வேலைத் திட்டங்கள் மக் கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளதாக வவுனியா நகர சபை அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது, கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமையில் இருந்து எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வவுனியா நகரசபை அலு வலகத்தில் மக்கள் பார் வைக்கு வைக்கப்பட்டுள் ளது. இப்பாதீட்டில் ஏதே னும் ஆட்சேபனைகள் இரு ப்பின் பொதுமக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூல மாகவோ அல்லது நேரிலோ முன் வைக்க முடியும் என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காகமைய வட்டா ரம் ஒன்றில் குடியிருப்பு உள்ளக வீதி புனரமைப்பு மற்றும் வாடிகாலமைப்புக்கு இருபது இலட்சமும் குடியி ருப்பு வீதியின் இருபக்க திருத்தத்திற்கு ஐந்து இலட் சமும் பூந்தோட்டம் மயான திருத்தம் மற்றும் மதில் அமைத்தலுக்கு முப்பது இல ட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வட்டாரத்தில் இல் உள்ள கோழிக்கடை மற்றும் குளவீதி புனரமை ப்புப் செய்வதற்கு பத்து இலட் சமும் துவிச்சக்கர வண்டி தரிப்படம் அமைத்தலுக்கு இருபது இலட்சமும் நகர த்தில் உள்ள மாட்டிறைச்சிக் கடை திருத்தத்திற்கு பத்து இலட்சமும் நகர உள்ளக வீதி மற்றும் வடிகாலமை ப்புக்கு பத்து இலட்சமும் உள்ளக வீதி கல்லிட்டு தாரிடல் மற்றும் வடிகால மைப்புக்கு இருபது இலட் சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மூன்றாம் வட்டாரத்தில் அன்னை திரேசா வீதி கல்லிட்டு தாரி லுக்கு இருபது இலட்சமும் சகாய மாதாபுரம் உள்ளக வீதி கல்லிட்டு தாரிடலுக்கு இருபது இலட்சமும் சகாயமா தாபுரம் வீதியின் இருபக்க திருத்தத்திற்கு ஐந்து இலட் சம் ரூபா நிதியும் ஒதுக்கப் பட்டுள்ளது.

அத்துடன் நான்காம் வட்டாரத்தில் உள்ள சூசை ப்பிள்ளையார் குளம் உள் ளக வீதி கல்லிட்டு தாரிட லுக்கு இருபது இலட்சமும் மற்றும் சூசைப்பிள்ளையார் குளம் வீதியின் இருபக்க திருத்தத்திற்கும் ஐந்து இலட் சம் ரூபாவும் சூசைப்பிள் ளையார் குளம் வீதி வடிகால மைப்புக்கு பத்து இலட்சமும் ஞான வைரவர் கோவில் வீதி கல்லிட்டு தாரிடலுக்கு இருபது இலட்சமும் ஒதுக் கப்பட்டுள்ளது.

ஐந்தாம் வட்டாரத்தில் உள்ள வைரவர் கோவில் வீதி அமைத்தலுக்கு இருபது இலட்சமும் குருமன்காடு பூங்கா மதில் அமைத்தலு க்கும் மற்றும் சிற்றுண்டி சாலை அமைத்தலுக்கு பதினை ந்து இலட்சமும் குருமன் காட்டிலுள்ள நகரசபை காணியில் முதியோர் பூங்கா மதில் அமைத்து வாயில் அமைத்தலுக்கு பதினைந்து இலட்சமும் வைரவ புளியங் குளம் வீதி இருபக்க திருத்த த்திற்கு ஐந்து இலட்சமும் குருமன்காடு உள்ளக வீதி இருபக்க வடிகாலமைப்புக்கு பத்து இலட்சமும் மாதிரி உறைவிட வீதி இரண்டின் வாடிகாலமைப்புக்கு பத்து இலட்சமும் ஒதுக்கப்பட்டுள் ளது.

வட்டாரம் ஆறில் உள்ள வெளிக்குளம் பிள்ளையார் கோவில் வீதி கல்லிட்டு தாரி டலுக்கு பதினைந்து இலட் சம் ரூபாவும் வட்டாரம் ஏழில் உள்ள திருநாவல் குளம் ஐந்தாம் ஒழுங் கைக்கு கல்லிட்டு தாரிடுவதற்கு இருபது இலட்சமும் திருநா வல்குளம் உள்ளக வீதி பாலம் அமைத்தலுக்கு இரு பத்தைந்து இலட்சமும் ஒதுக் கப்பட்டுள்ளது.

எட்டாம் வட்டாரம் கோவில் புதுக்குளம் பத்தாம் ஒழு ங்கை கல்லிட்டு தாரிடலுக்கு இருபது இலட்சமும் ஒன் பதாம் வட்டாரத்தில் உள்ள மூன்று முறிப்பு பாடசாலை வீதி கல்லிட்டு தாரிடுவதற்கு பத்து இலட்சமும் மற்றும் தோணிக்கல் மூன்றாம் ஒழு ங்கைக்கு கல்லிட்டு தாரிடு வதற்கு பதினைந்து இல ட்சம் உட்பட தேக்கந் தோட் டம் மயான வேலி அமைத் தலுக்கு ஐந்து இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வட்டாரத்தில் உள்ள பண்டாரிகுளம் முத லாம் ஒழுங்கை (விபுலான ந்தா பாடசாலை முன்புறம்) வடிகாலமைப்பு செய்வதற்கு பத்து இலட்சமும்.

பதினொராம் வட்டா ரத்தில் பட்டானிச்சூர் இரண் டாம் ஒழுங்கை கல்லிட்டு தாரிடுவதற்கு பதினைந்து இலட்சமும் பட்டானிச்சூர் முதலாம் ஒழுங்கை வடிகா லமைப்புக்கு ஐந்து இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீதி விள க்குகள் பொருத்தலுக்கு பத்து இலட்சமும் வீதி திருத்தப் பொருட்கள் கொள்வனவுக்கு பத்து இலட்சமும் ஒதுக்கப் பட்டுள்ளதுடன் நகரசபை அபிவிருத்தி வேலைத் திட் டத்திற்கு ஐம்பத்தேழு இல ட்சமும் ஏனைய நூலக மற்றும் பாதுகாப்பு ஒழுங்க மைப்புக்காகவும் மற்றும் கட்டணங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு ள்ளது என நகரசபை அலு வலகத் தகவலில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-15-250)

தடைசெய்யப்பட்ட பட்டி வலைகளை

கடல் பரப்பில் இருந்து அகற்றுமாறு வங்காலை மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

தடை செய்யப்பட்ட பட்டி வலை மூலம் மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கை களில் ஈடுபட்டு வருவதனால் ஏனைய கடற்றொழில் நடவ டிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஏழை மீனவர்கள் கடுமை யாக பாதிக்கப்பட்டு வருவதாக மடுப்படுத்தப்பட்ட வங்காலை புனித அந்தோனியார் மீன வர் கூட்டுறவுச்சங்கம் தெரி வித்துள்ளது.

மன்னார் கடல் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள பட்டி வலைகளை அகற்றக்கோரி கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை காலை வங்காலை கிராம மீனவர்கள் மன்னார் மதவாச்சி பிரதான வீதியிலு ள்ள வங்காலை சந்தியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது படகுகளை வீதிக்கு அருகில் வைத்து தென் கடல் பகுதியில் அமை க்கப்பட்டுள்ள பட்டி வலை களை அகற்றுமாறு கோரி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் "நீதிமன்ற தீர் ப்பை நடைமுறைப்படுத் துங்கள், நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்காதீர்கள், பாரம் பரியமாக வலைத்தொழில் செயயும் மீனவர்களின் இடங் களில் பட்டி வலைகளை வைக்காதீர்கள், கரை வலை, சிறு தொழில் செய்கின்ற மீனவர்களின் வாழ்வாதா ரம் பட்டிவலை தொழிலி னால் பாதிக்கப்படுகின்றது, அதிகாரிகளே சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள், அதிகாரிகளே சட்டவிரோத தொழிலுக்கு துணை போகா தீர்கள்" உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதா கைகளை ஏந்தியவாறு வங் காலை கிராம மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறு தியில் மட்டுப்படுத்தப்பட்ட வங்காலை புனித அந்தோ னியார் மீனவர் கூட்டுறவுச்ச ங்கம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள் ளனர். (2-9)

ஜனவரி - டிசெம்பர் வரையில்

215 சட்டவிரோத வழக்குகள் மன்னார் நீதிமன்றில் தாக்கல்

மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 215 சட்டவிரோத வழக்குகள் மன்னார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எஸ்.ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் பகுதியில் 187 கிலோ கிராம் கேரள கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 4 இலட்சத்து ஆயிரத்து 671 லீற்றர் பியர் வகை குடிபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அதுபோல், 10 ஆயிரத்து 747 லீற்றர் வெளிநாட்டு மது வகைகளும் 4 இலட்சத்து 7 ஆயிரத்து 172 லீற்றர் அரச சாராய வகைகளும் நுகர்வோரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அனுமதிப் பத்திரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்களுக்கு எதிராக 31 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டப் பணமும் அறவீடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் கசிப்பு வடித்தமை, கஞ்சா போன்ற போதைப் பொருட்களைத் தம்வசம் வைத்திருந்தமை, அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம், கள்ளு மற்றும் பியர் போன்றவற்றை விற்பனை செய்தல் உள்ளிட்ட 215 வழக்குகள் மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் மன்னார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

முல்லைத்தீவில் வஜிர அபேவர்த்தன

(பனிக்கன்குளம்)

பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்டார்.

மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்களுக்கான பயணப்பை மற்றும் இலட்சினைகளை வழங்கி வைக்கின்ற நிகழ்விலும் பங்கேற்றார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (2-281)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்ட போது... (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

மாற்றுவலுவுள்ளவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள்

மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு தண்ணீரூற்று இலங்கைத்திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாற்றுவலுவுள்ள பிள்ளைகளுக்கு "மூளை முடக்கு வாதம் மற்றும் அது சார்ந்த பாதிப்புக்களையுடைய பிள்ளைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்" என்னும் திட்டத்தின் கீழ் மன்னார் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச்சங்கத்தின் (மார்டப்) அமுலாக்கலில் முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையிலும் கோம பாவிலிலும் இப் பிள்ளைகளுக்கான விசேட பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

அந்தவகையில் இப் பாடசாலைகளில் கல்விபயிலும் பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்தும் முகமாக பிள்ளைகளினது கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வானது மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வரும் மார்டப் நிறுவன ஆளுநர்சபைத் தலைவருமான அருட்தந்தை விகடர் சோசை அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் தசரதன், முல்லைத்தீவு வேல்ட் விஷன் நிறுவன முகாமையாளர் யூட் நிசாந்தன், கமநலசேவை உதவி ஆணையாளர் ஆயகுலன், மோட்டிவேசன் நிறுவன தள இணைப்பாளர் சுதர்ஷன் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அத்துடன் அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூகசேவை ஆர்வலர்கள், பொதுமக்கள், மாற்றுவலுவுள்ள பிள்ளைகள், அவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-9)

பண்டிகைக்கால வியாபாரத்திற்கென ஒதுக்கியுள்ள

வர்த்தக நிலையங்களில் அதிகூடிய விலைக்கு பொருட்கள் விற்பனை

மன்னார் மக்கள் விசனம்

(மன்னார்)

மன்னார் நகர சபையினால் பண்டிகைக்கால தற்காலிக வியாபாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை வர்த்தகர்களுக்கு அதிகூடிய விலைக்கு நகரசபை குத்தகைக்கு வழங்கியுள்ளதன் காரணமாக வர்த்தகர்கள் தமது இலாபத்தை கருத்தில் கொண்டு கடந்த வருடத்தை விட இம்முறை அதிகூடிய விலைக்கு பொருட்களை விற்பனை செய்து வருவதாக மன்னார் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நகரசபையினால் பண்டிகைக்கால தற்காலிக வியாபாரத்திற்காக ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட 185 கடைத்துண்டுகள் மூலம் சுமார் 70 இலட்சம் ரூபாய் மன்னார் நகர சபைக்கு வருமானமாக கிடைத்துள்ளதாக மன்னார் நகரசபையின் செயலாளர் எல்.றெனால்ட் பிறிற்றோ தெரிவித்தார்.

எனினும் குறித்த கடைகள் 13 ஆயிரம் ரூபாய் முதல் 67 ஆயிரத்து 800 ரூபாய் வரை வர்த்தகர்கள் ஏலம் மூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அதிகூடிய பணத்தை கொடுத்து கடை அமைப்பதற்கான இடத்தை பெற்றுக்கொண்ட வர்த்தகர்கள் தமது வருமானத்தை கருத்தில் கொண்டு இம்முறை பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

பிரதான வீதிக்கு அருகாமையில் பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமையினால் குறித்த வியாபார நிலையங்களுக்கு முன் நிறுத்தி பொருட்களை கொள்வனவு செய்கின்ற ஆட்டோக்களின் உரிமையாளர்களுக்கு எதிராகவும் வீதி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

திட்டமிடப்படாத நடவடிக்கைகளின் காரணமாக மன்னார் மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-9)

தமிழ்மொழியின் காவலர் நாவலர்

ஈழநாட்டிலே தோன்றிய பெரியார்களில் ஆறுமுக நாவலர் ஒரு முன்னோடியாகத் திகழ்பவர். காலம் கடமை செய்யவெனச் சிலரை அடையாளம் காட்டும். வையகம் எங்கும் பலர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் காலம் அறிந்த பணிகள் இன்றும் தொடர்கின்றன. அந்த வகையில் நாவலர் எனச் சிறப்பான பட்டம் பெற்றுப் பணி செய்த ஆறுமுகநாவலரை இன்று தமிழர் தலைமுறைகள் மீள நினைவுகூர வேண்டிய காலம் இதுவாகும். குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு நாவலரை நல்ல முறையிலே அறிமுகம் செய்ய வேண்டியதும் இன்றியமையாததாகும்.

நாவலர் பணிகளில் தமிழ்மொழிக்கான பணியே எதிர்காலத்திலும் தொடர வேண்டிய பணியாகும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட வையத்து மக்கள் அனைவரும் அவரது பணியை முன்னெடுக்க வேண்டும். ஒரு மொழி காலத்தால் அழியாது இருக்க வேண்டும் என்றால் அம்மொழி தொடர்ந்து தொடர்பாடல் மொழியாகப் பேணப்பட வேண்டும். அம்மொழி பிற மொழிகளால் தாக்குண்டு நலியும் போது அதை மீண்டும் ஆற்றல் பெறப் பணி ஆற்ற வேண்டும்.

இத்தகைய ஒரு சிறந்த பணியையே நாவலர் செய்தார். அதற்காக ஏற்ற திறன்களை வளர்த்துக் கொண்டார். தன் தாய்மொழியான தமிழில் சிறந்த புலமையையும் பெற்றார். அத்துடன் அவர் வாழ்ந்த காலத்திலே பரவிய வடமொழியையும் ஆங்கில மொழியையும் கற்றுப் புலமை பெற்றார்.

அவருடைய இந்த மும்மொழிப்புலமை அவருடைய தமிழ்மொழியின் காவல் பணிப்பு அன்று மிகவும் வேண்டப்பட்டது.

வடமொழியின் செல்வாக்குத் தமிழ் மொழியிலே படர்ந்த போது அப்புதிய மொழியை எல்லோரும் பெற விழைந்தனர். கற்றோர் பலர் வடமொழியை விரும்பிக் கற்றனர்.

அம்மொழிப் புலமையால் வடமொழிச் சொற்களைத் தமிழ் மொழியில் கலந்து பேசும் ஒரு புதிய மொழிப் பயன்பாட்டையும் மக்களிடையே பரப்பினர். அதனால் பேச்சு மொழியிலே வடமொழிச் சொற்கள் நிறையவே வந்து கலந்தன. வடமொழிக் கல்வியைப் பெறாதவர்களும் வடமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதன் மூலம் தம்மை வடமொழிப் புலமையாளராகக் காட்டிக் கொண்டனர். ஆறுமுகநாவலர் தான் பெற்ற வடமொழிப் புலமையால் வடமொழி நூல்களைக் கற்று அவற்றின் உட்பொருளை தமிழ் நூல்களிலே பதிவு செய்தார். மேலும் பழந் தமிழ்ச் செய்யுள்களுக்கு உரை செய்யும் போதும் பொருள் விளக்கந்தரும் கலைச் சொற்களாக வட சொற்களைப் பயன்படுத்தினார். ஆனால் அவருடைய இலக்கு பழந் தமிழ் இலக்கிய இலக்கணங்களை எல்லோரும் அறிய வேண்டுமென்பதே.

நாவலர் காலத்திலே மேலைத்தேய மொழியான ஆங்கில மொழியும் வந்து சேர்ந்தது. அப்புதிய மொழியோடு மேலைத் தேயப் பண்பாடும் வேகமாக வந்து கலந்தது. ஆட்சி மொழியாக ஆங்கிலம் அமைந்ததால் உத்தியோகம் என்ற புதிய பணி அறிமுகமாகியது. நில வேளாண்மை, கடல் வேளாண்மை என இரு வேளாண்மையும் அவற்றுடன் தொடர்புற்ற கருவிகளை ஆக்குதல், அவை தொடர்பான வணிகம் என்ற செயற்பாடுகள்

வலுவிழந்தன. பணி மனையில் மேலைத்தேய ஆடை அணிந்து ஆங்கிலம் பேசிக் கதிரையில் அமர்ந்து பணி செய்வதே உயர்ந்த நாகரீகம் என்ற கருத்து மக்களிடையே பதியத் தொடங்கியது. இதனால் தமிழ் மொழிக் கல்வி புறந்தள்ளப்பட்டது. உத்தியோகம் புருஷ லட்சணமாக ஆண்கள் பலர் ஆங்கில மொழிக் கல்வியைப் பெரிதும் விரும்பிச் சென்றனர்.

இந்நிலையில் பழந்தமிழ் நூல்கள் ஏட்டு வடிவிலேயே இருந்தன. அவற்றைக் கையில் எடுத்துத் திண்ணைப் பள்ளியிலே இருந்து படிப்பதற்கு எல்லோரும் தயங்கினர். நாவலரும் தனது மூன்றாம் மொழிப் புலமையாக ஆங்கில மொழியையும் கற்றார். எனினும் அவர் உள்ளத்திலே ஒரு காலத்திற்கேற்ற பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. வட மொழித் தொடர்பால் செல்வாக்கிழந்த தமிழ் மொழி ஆங்கில மொழியின் செல்வாக்கால் முற்றாகப் புறந்தள்ளும் நிலை ஏற்படலாம் என்பதை அவர் நன்கு உணர்ந்து கொண்டார்.

எனவே தமிழ் மொழியைப் பேணி எதிர்காலத் தமிழர் தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டும் என உறுதிபூண்டார். தமிழ் மொழிக் கல்வியைப் பரப்பப் பல முயற்சிகளை மேற்கொண்டார். தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கில மொழிக் கல்வியை நாடிச் செல்லும் தனது காலத்தவரை மாற்றுவதை விட இளைய தலைமுறையையே நெறிப்படுத்த அவர் விரும்பினார். ஆங்கில மொழிக் கல்வியைப் பரப்பத் தோன்றிய பல்வேறு முயற்சிகளையும் உள்வாங்கித் தமிழ்மொழிக்கல்வியை மீள்கட்டமைப்புச் செய்தார். திண்ணைப் பள்ளிக்கல்விமுறையை விடுத்து பாடசாலைக் கல்வியாக்கப் பல பணிகள் செய்தார். தமிழ்மொழிப் பாடசாலை, அதற்கான தமிழ்ப்பாட நூல்கள், உரை நூல்கள், இலக்கண நூல் என்பவற்றை ஆக்கினார். தமிழ் இலக்கிய இலக்கணக் கல்வியை இளந்தலைமுறையினர்க் கேற்றவாறு வடிவமைத்தார்.

தமிழ்மொழியைக் காப்பதற்கு வெறுமனே பள்ளிக்கல்வி மட்டும் போதாது. இலக்கிய, இலக்கண, புராணம், காப்பியம் போன்றவற்றை மக்கள் கேள்வியறிவால் பெற வேண்டி உரையாற்றும் பணியையும் தொடங்கினர். நாவலருக்கு முன்னே வாழ்ந்த தமிழ்ப் புலமைச் சான்றோர் மொழிப் புலமையை அனைத்து மக்களும் பெற வேண்டும் என்பதே நாவலருடைய தொலைநோக்காக இருந்தது. எனவே தமிழர் கூடி வழிபாடு செய்யும் கோவில்களிலே உரையாற்றும் பணிகளை மேற்கொண்டார். கல்வியை நெறிப்படுத்த வழிபாடு துணை செய்யும் என்பதைப் பொது மக்களும் உணரவேண்டி அவர் செய்த உரை வடசொல்லால் பிரசங்கம் என்று அழைக்கப்பட்டமை ஆங்கிலமொழியின் செல்வாக்குத் தமிழிலே வந்து சேர்ந்த போதும் வடமொழியின் செல்வாக்கும் முற்றாக மறையவில்லை என்பதை உணர்த்துகிறது.

எனவே நாவலர் தமிழர் தாய்மொழியைப் பேண வேண்டும் என நெறிப்படுத்தியுள்ளமை இன்று துலக்கமாகவுள்ளது. இன்று தமிழருக்குப் பலமொழிகளைக் கற்று புலமைச் சான்றோராகும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர்கள் யாவரும் நாவலரின் தொலை நோக்கான தமிழ்ப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். நாவலர் விழா என்பது தமிழ்மொழிப் பேணலைத் தமிழர் யாவருக்கும் நினைவூட்டும் விழாவாக அமைய வேண்டும். புலம்பெயர் நாடுகளிலும் நமது நாட்டிலும் தமிழ் மொழியை பேணி அடுத்த தலைமுறைக்குக் கையளிப்புச் செய்ய வேண்டிய கடமையை நாம் தொடர வேண்டும். அதுவே நாவலருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

மூனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–100

பல்துறையும் இணைந்த பனைசார் ஆராய்ச்சியுடான அபிவிருத்தி!

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

என் இனிய உறவுகளே !

கடந்த வாரம் பனைஆராய்ச்சி நிலையத்தில் இதுவரையும் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளை ஒன்றிணைத்து இந்நிறுவனத்தால் நூல்வடிவில் வெளியிட்ட நிகழ்வில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. இந்த முயற்சிக்கு கால்கோலாகவிருந்த பனை அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். சிவசங்கருக்கு மனந்திறந்த பாராட்டுக்கள்!. எமது மண்ணுக்குரிய மரத்திற்கு அதன் விருத்திக்கு மிகவும் ஆர்வத்துடனும் முயற்சியுடனும் முன்னின்று உழைக்கும் பனை அபிவிருத்தி சபையினருக்கும் பனை ஆராய்ச்சி நிலையத்திற்கும் பனை தென்மை அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்கள். இந்த மண்ணுக்குரிய கற்பகதருவின் மகிமையை உலகமறியச் செய்யவேண்டும்!. பனை சார் அபிவிருத்தி என்பது பனைமரத்தின் பாதுகாப்பு, அதனை மேலும் பரம்பலடையச் செய்தல்,பனைமரத்தின் எண்ணிக்கையை அதிகரிக்கச்செய்தல்,பனைமரத்தின் பாகங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல்,குறிப்பாக அதிலிருந்து பெறப்படும் பொருட்களை மதிப்பேற்றஞ் செய்து உலகசந்தைக்கு எடுத்துச்செல்லுதல் என்பன இதனுள் அடக்கம். பனைசார்பொருளாதாரம் என்பது பனை சார்ந்த சூழல்தொகுதிக்கான சிறப்பம் சமாகும். சூழல்தொகுதியென்பது அதனுள் உள்ளடங்கலான உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தினதும் ஒன்றிணைவு ஆகும். ஆனாலும் இச்சூழல்தொகுதிக்குள் உள்ளடங்கியிருக்கும் உயிருள்ள அனைத்தும், இதனை மையப்படுத்தியே அதனைச்சுற்றி இயங்கிக் கொள்கின்றன. இச்சூழல்தொகுதியில் மனிதனும் ஓர்அங்கியாக இயங்கிக்கொண்டிருக்கின்றான். போர் நடைபெற்ற காலத்தில் வடபகாணத்தின் பலபகுதிகள் மனிதர்கள் நடமாட முடியாத பகுதிகளாக அறிவித்தலையும் அவற்றில் எவருமே எதுவுமே செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளபோது குறிப்பிட்ட அழுத்தங்களின் காரணமாக கடலாக எவருமே கலந்து கொள்ளவது இயற்கையானதாக இருக்காது.

பனையின் மகத்துவம் அனப்பரியது. அதனை இனங்காணப்பட்ட இடங்களில் நடுகைசெய்வதோடு மட்டுமல்லாது பாதுகாத்தலுடன் தேவைக்கு ஏற்றனவற்றை வினைத்திறனாக பயன்படுத்தவும் முயற்சிக்கவேண்டும். பனைசார்ந்த அபிவிருத்திக்கு அதனை பயன்படுத்துவதற்கான ஆய்வுகள் இன்னமும் முடுக்கிவிடப்பட வேண்டும். நடைபெற்ற போரில் அழிந்து போயிருந்த பனை அபிவிருத்தி நிறுவனம் இந்திய அரசாங்கத்தினால் புனரமைக்கப்பட்டு ஆய்வுக்கு தேவையான வசதிகள், ஆய்வுகூட உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஆய்வினை மேற்கொள்வதற்கு துடிப்புடன் செயலாற்றும் ஆய்வாளர்களும் தற்போது கடமைபுரிந்து வருகின்றார்கள். இவர்களுடன் ஏனைய நிறுவனங்களும் இணையும் போது ஆய்வின் வெளிப்பாடு பனைசார் அபிவிருத்தியினை மேம்படுத்த கிடைக்கும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம் மற்றும் விவசாய பீடம் என்பன ஆய்வு சார்ந்து இணைக் கப்பட்டிருப்பினும் இன்னமும் விடை காணாத பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல்துறை ஆய்வுகள் முடுக்கிவிடப்பட வேண்டும்.

பனையை முக்கியமாக பயனற்ற நிலங்களில் நடுகைசெய்வதற்கான பனம்விதை மற்றும் நாற்றுக்கள் என்பன விரைந்து பெறத்தக்கதாயும் பனைமரங்களில் பல்வேறு வகையான குணாதிசயங்களைக் கொண்ட மரங்கள் வடபுலமெங்கும் பரந்து காணப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு வளர்த்து அந்த இயல்புகளுடைய மரங்களை மீண்டும் நாம் வளர்க்க ஆவன செய்தல் வேண்டும். கற்பகதருவான பனைமரத்தின் ஒவ்வொரு பகுதியுமே பயனுள்ளதாகும். ஆனால் பனை மற்றும் தென்னை என இரண்டையும் கவனித்தால் ஏ-9 பாதையூடாக பயணிக்கும் எவரும் பனையை "பெக்கோ"கொண்டு பிடுங்கியெறிந்துவிட்டு தென்னையை நடுவதனை அவதானிக்கலாம். எவருடைய துணையுமின்றி எந்த கவனிப்புமின்றி இயற்கையாக விழுந்து முளைத்திருக்கும் பனம் வடலிகளை பிடுங்கியெறியும் எம்மவர்கள் அண்ணனை பிடுங்கியெறிந்து விட்டு தம்பியை நடுவதனை காணலாம். இதற்கெல்லாம் காரணமென்னவெனில் தென்னைக்குரிய மவுசு பனைக்கு இல்லாதது தான். நிலம் வரண்ட போதெல்லாம் பசுமையாகவே இருக்கும் பனைமரத்தின் முக்கியத்துவத்தை எம்மவர்கள் இன்னமும் இனங்காணாதது தான் இதற்கெல்லாம் காரணம். தானாக முளைக்கும் பனையினை வளர்த்தெடுத்து அதனை முழுமையாக பயனுள்ளதாக அதிகம் இலாபத்தைத்தரக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தினை உள்வாங்கி உருவாக்கிக் கொள்ள முடியுமானால் பனையின் பொருளாதாரம் பலமடங்கு அதிகரிக்கும். இதன்மூலம் அதனை நம்மியிருக்கும் எம்மினிய உறவுகளின் வாழ்வாதாரம் பலமடங்கு சிறப்படையும். எமது மண்ணில் எமக்காக வளர்ந்திருக்கும் பனைமரத்தின் மகிமையை கற்றறிந்தவர்கள், ஆய்வாளர்கள் அனைவரும் ஒரு கணம் சிந்தித்து அதற்காக தமது ஆய்வுப்புலமையை உள்வாங்கிக்கொண்டால் பனைமரத்திலிருந்து பல பயன்களை நாம் பெறக்கூடிய நாளிருக்கும். எமது பலமும் பலவீனமும் இதனை பயன்படுத்தும் வழிவகையிலேயே உள்ளடங்கியிருக்கின்றது. எமது மண்ணில் உள்ள வளங்களை நாம் பயன்படுத்த முனையாமல் மேலைத்தேய மோகத்தில் இன்னமும் இருப்பது வேடிக்கையாகவே இருக்கின்றது. இது நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளும் நிலைக்கு ஒப்பானது. உள்ளூர் வளங்களை இனங்கண்டு அவற்றை நாம் வினைத்திறனாக பயன்படுத்தும் காலத்தை நாம் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். கிடைக்கின்ற விஞ்ஞான தொழில்நுட்பத்தை இதன்பால் திருப்பினால் சுத்தமானதும் சுகாதாரமானதுமான உணவு வகைகள், எமக்கான பயன்படு பொருட்கள்,விருந்தினர்களை கௌரவிக்கும் பொருட்கள், சுற்றுலாப் பயணிகளை கவரும் பொருட்கள், மேலும் மதிப்பேற்றஞ் செய்த பொருட்களை அதுவும் புதிய பொருட்களை உலகச்சந்தைக்கு கொண்டு செல்லும் தொழில்நுட்பத்தை தேடிய ஆய்வுகள் எமக்கு அவசியம் தேவைப்படுகின்றது. இது சார்ந்த தொழிற்றுறைக்கு இயந்திரமயமாக்கல் அவசியமாகின்றது. அதன்மூலம் உலகசந்தையில் விற்பதற்கான தரமான சிறந்த பொருட்களை நாம் உற்பத்தி செய்ய முடியும். பனையின் பாகங்களிலிருந்து பல பெறுமதியான பொருட்களை நாம் உருவாக்க வேண்டும். தற்போது உற்பத்தியாகும் பொருட்களிலுள்ள குறைபாடுகளை களைந்தெறிய ஆய்வாளர்களை ஒன்றிணைத்து உழைக்கவேண்டும். வருடாவருடம் பனைசார் ஆய்வுமாநாடு நடத்தப்பட்டு பனைசார்ந்த ஆய்வுகளை உற்பத்தி சார்ந்து, தொழிற்றுறை சார்ந்து, தரமான பொருட்கள் சார்ந்து நடத்துதல் வேண்டும். இங்கே நடைபெறும் ஆய்வுகள் வெறுமனே உலக ஆய்வு கஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்காக மட்டுமல்லாது அவற்றின் பயன்பாட்டினை நாம்பெறும் வழியில் நடத்தப்பட்டு அதன் முடிவுகள் தீர்வுகளாக எமது மக்களுக்கு சென்றடைய வேண்டும். பனையை பிடுங்கியெறிந்துவிட்டு தென்னையை நடும் எம்மவர்கள் உணர்ந்து தென்னையை பிடுங்கியெறிந்துவிட்டு பனையை நடும் காலம் கனிந்து வரல் வேண்டும். அப்படியொரு காலம் வருகின்றதோ அன்றே துறைசார்ந்த பங்களிப்புடனான ஆய்வுக்குரிய களம் இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டும். எம்மிடம் இல்லாத குறைகளை மட்டும் எப்பொழுதுமே எடுத்துக்காட்டும் நிலையிலிருந்து மாறி எமக்கான வசதிவாய்ப்புக்களை நாமே ஏற்படுத்திக்கொண்டால் எமது நாடும் எமது மண்ணும் சிறப்படையும். வாருங்கள் இது எமக்கான காலம்.

2017 ஆம் ஆண்டு இதற்கான களத்தை அமைத்துக் கொடுக்கும் என நம்பலாம். நல்லதொரு தலைமையின் கீழ் பனை அபிவிருத்திச்சபை தற்போது இயங்குகின்றது. அந்த சபையின் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பிற்கும் நாம் எல்லோரும் சேர்ந்து கைகொடுப்போம். இது எமக்காக நாம் எல்லோரும் இணைந்து செய்ய வேண்டிய கைங்கரியம். இதற்காக எவரையும் நாம் தங்கியிருத்தலிலிருந்து மாறி நாமே முயற்சிப்போம் முயற்சி திருவினையாக்கும்.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 117



ஜப்பானில் இராணுவத்துக்கு மிகப்பெரும் தொகை ஒதுக்கீடு

(டோக்கியோ)

பகை நாடுகளை அதிர வைக்கிற அளவுக்கு ஜப்பான் வரலாற்று சாதனை அளவாக இராணுவத்துக்கு மிகப் பெருந்தொகை நிதி (97.5 டிரில்லியன் யென்) ஒதுக்கியுள்ளது.

சீனாவுடன் ஜப்பானுக்கு கிழக்கு சீனக்கடல் விவகாரத்தில் முரண்பாடு நிலவி வருகிறது. இன்னொருபுறம், ஜப்பானுக்கு வடகொரியாவின் அணு ஆயுத திட்டங்கள், மிரட்டல்களாக அமைந்துள்ளன. எனவே ஜப்பான் அச்சுறுத்தல்கள் மத்தியில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் பகை நாடுகளை அதிர வைக்கிற அளவுக்கு ஜப்பான் வரலாறறு சாதனை அளவாக இராணுவத்துக்கு மிகப்பெருந் தொகை நிதி (97.5 டிரில்லியன் யென்) ஒதுக்கியுள்ளது.

போர் விமானங்கள், நீர் மூழ்கி கப்பல்களுக்காக 43.6 பில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூ.2 இலட்சத்து 88 ஆயிரத்து 140 கோடி) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆவணத்தில் அந்த நாட்டின் பிரதமர் ஷின்ஜோ அபே கையெழுத்திட்டு விட்டார்.

இந்த பட்ஜெட்டுக்கு ஜப்பான் பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும். அப்படி ஒப்புதல் அளித்து விட்டால், அது இராணுவ பட்ஜெட்டில் தொடர்ந்து 5 ஆவது ஆண்டாக கூடுதல் நிதி ஒதுக்கீட்டைப்பெறும்.

ஜப்பான் 5 புதிய பெரிய ரோந்து கப்பல்கள் வாங்கவும் முடிவு செய்துள்ளது. அத்துடன் 200 கடல்சார் சட்ட பாதுகாப்பு அதிகாரிகளை நியமிக்கவும் முடிவு செய்துள்ளது.

வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு ஏற்ப தனது நாட்டின் ஏவுகணை திட்டங்களை மேம்படுத்தவும் ஜப்பான் தீர்மானித்துள்ளது. (இ-3-10)

அரச கட்டுப்பாட்டுக்குள் அலெப்போ நகர் வந்தது

சிரிய அரச படைகளின் கட்டுப்பாட்டிற்குள் அலெப்போ நகர் மீண்டும் வந்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான உள்நாட்டுப்போர், 6 ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த அலெப்போ நகரை முழுமையாக விடுவிப்பதற்காக ஜனாதிபதி ஆதரவு படையினர், கடந்த மாதம் மத்தியில் இருந்து அங்கு கடும் சண்டையில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்காக, அலெப்போ நகரில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர். இதற்காக பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு சர்வதேச செஞ்சிலுவை கமிட்டி மேற்பார்வையின் கீழ் இந்த வெளியேற்றும் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக தீவிரமாக நடைபெற்று வந்தன.

அலெப்போ நகரில் உள்ள பழைய நகரம் உட்பட நான்கில் மூன்று பகுதியை சிரிய இராணுவத்திடம் கிளர்ச்சியாளர்கள் இழந்த நிலையில், மீதமுள்ள பகுதிகளை மீட்பதற்கு தீவிரமான சண்டை நடைபெற்று வந்தது.

அலெப்போ நகரில் பெரும்பாலான இடங்களை இழந்த நிலையில், 5 நாட்கள் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு கிளர்ச்சியாளர்கள் அழைப்பு விடுத்தனர். ஆனால், ரஷ்ய ஆதரவு சிரிய அரச படைகள் தொடர்ந்து தாக்குதல்களை மேற்கொண்டு வந்தது.

போர்நிறுத்தத்தை கொண்டு வர வேண்டும் என்ற ஐ.நா. மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கோரிக்கையை பொருட்படுத்தாமல் இந்த தாக்குதல் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், சிரிய அரச படைகளின் கட்டுப்பாட்டிற்குள் அலெப்போ நகர் மீண்டும் வந்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-3-10)

மொசூல் அருகே அடுத்தடுத்து கார் வெடிகுண்டுத் தாக்குதல் 23 பேர் உயிரிழப்பு

ஈராக் நாட்டின் மொசூல் நகர் அருகே ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற கார் வெடிகுண்டு தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.

ஈராக் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மொசூல் நகரை மீட்பதற்காக அங்கு ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். அமைப்பினருடன் ஈராக் படைகள் கடும் சண்டை நடத்தி வருகின்றன.

கடந்த ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி தொடங்கிய இந்த சண்டை காரணமாக மொசூல் நகரில் வசித்து வரும் மக்கள் உயிர் பிழைப்பதற்காக அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களுக்கு சென்று வண்ணமாக உள்ளனர்.

இந்நிலையில், மொசூல் நகர் அருகே ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து கைப்பற்றப்பட்ட பகுதியில் அடுத்தடுத்து நடைபெற்ற கார் வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து அரச படைகள் ஒருங்கிணைப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோக்ஜலி என்ற இடத்தில் உள்ள மார்க்கெட் பகுதியில் மூன்று கார் வெடிகுண்டு தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 8 பொலிஸார் மற்றும் 15 பொது மக்கள் உயிரிழந்தனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-10)

துருக்கி இராணுவ வீரர்களை உயிரோடு கொளுத்தும் ஐ.எஸ். தீவிரவாதிகள்

(பெய்ரூட்)

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் செயற்பாடுகளை அடக்கும்பணியில்அயல்நாடான துருக்கியின் படைகளும் ஈடுபட்டுள்ளன. இதனால், துருக்கி படைகள் மீது கடும் ஆத்திரத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள உள்ளனர். இந்த நிலையில், ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் தனது இணையத்தளத்தில் கொடூர வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. இதனால் துருக்கி இராணுவ வீரர்களை உயிரோடு தீயில் எரிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. நெஞ்சை உறைய வைக்கும் இந்த சம்பவம் உலக அளவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தீயிட்டு எரிக்கும் முன் இரு வீரர்களையும் ஒரு கூண்டுக்குள் ஐ.எஸ். இயக்கத்தினர் நிறுத்தியுள்ளனர். 19 நிமிடங்கள் இந்த வீடியோ ஓடுகிறது. சிரியாவின் வடக்கு மாகாணமான அலெப்போ பகுதியில் இந்தக் காட்சிகள் படமாக்கப்பட்டு இருக்கலாம் என தெரிகிறது. ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் அமக் இதழில் கடந்த மாதம் இரு துருக்கி இராணுவ வீரர்களை கடத்தியதாக கூறியிருந்தனர். அதேபோல், துருக்கி இராணுவம் இரு வீரர்களுடனான தொடர்பை இழந்து விட்டதாக கூறியிருந்தது.

சிரியாவில் ஐ.எஸ் அமைப்பனரின் கட்டுப்பாட்டில் உள்ள அல்பாப் நகரில் நேற்று முன்தினம் அந்த அமைப்பினருக்கும் துருக்கிப் படையினருக்கும் கடுமையான மோதல்கள் வெடித்தன. இந்த மோதல்களின் முடிவில் துருக்கி படை வீரர்கள் 14 பேர் பலியாகினர். 33 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதல் நடை பெற்று இரு தினங்கள் ஆன நிலையில், இந்த கொடூர வீடியோ வெளியாகியுள்ளது. (இ-3-10)

ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் மோதல் துருக்கி படையினர் 14 பேர் பலி

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை அடக்கும் பணியில் அயல் நாடான துருக்கியின் படைகளும் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள அல்பாப் (இது துருக்கி எல்லையில் இருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது) நகரில் நேற்று முன்தினம் அந்த அமைப்பினருக்கும் துருக்கி படையினருக்கும் கடுமையான மோதல்கள் வெடித்தன.

இந்த மோதல்களின் முடிவில் துருக்கிப் படை வீரர்கள் 14 பேர் பலியாகினர். 33 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்களில் பலரது நிலைமை மோசமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிரான நடவடிக்கையில் துருக்கி ஒரே நாளில் சந்தித்த மிகப்பெரிய இழப்பாக இது கருதப்படுகிறது. (இ-3-10)

ஆப்கானிஸ்தானில் எம்.பி.வீட்டில் தற்கொலைப்படைத் தாக்குதல்!

11 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் எம்.பி. வீட்டில் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி அல்-கொய்தா அமைப்பினர் நடத்திய அதி பயங்கர தாக்குதல்களை தொடர்ந்து, அவர்களுக்கு அடைக்கலம் தந்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அங்கு ஆட்சியில் இருந்த தலிபான்களை விரட்டி அடித்து மக்களாட்சியை ஏற்படுத்தியது.

15 ஆண்டுகளாகியும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒழிக்க முடியாமல் அந்த நாட்டு அரசும், அமெரிக்க கூட்டுப்படைகளும் திணறி வருகின்றன.

எம்.பி. வீட்டில் தாக்குதல

இந்த நிலையில் அங்கு போதைப்பொருளான அபினுக்கு பிரசித்தி பெற்ற ஹெல்மாண்ட் மாகாணத்தில், பெருகி வரும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினராக உள்ள மிர்வாலியின் காபூல் நகர வீட்டில் நேற்று முன்தினம் முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதை மோப்பம் பிடித்த தலிபான் அமைப்பின் தற்கொலைப்படையினர் 3 பேர், மிர்வாலியின் வீட்டுக்குள் நுழைந்து சரமாரியாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர். அங்கிருந்த பாதுகாப்புப் படையினரும் அவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்கத் தொடங்கினர்.

8 பேர் பலி

இரு தரப்பினருக்கும் இடையேயான கடும் துப்பாக்கிச்சண்டை நேற்று அதிகாலை வரை நீடித்தது.

தற்கொலைப்படையினர் தாக்குதலின்போது, மிர்வாலி எம்.பி. வீட்டின் மொட்டை மாடி மீது ஏறி வெளியே குதித்து காயங்களுடன் உயிர் தப்பினார். தற்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆனால் அவரது பேரக்குழந்தைகள் 2 பேர், காந்தகார் எம்.பி. ஒபைதுல்லா பாரிக் ஜாயின் 25 வயது மகன், மெய்க்காவலர்கள் உட்பட மொத்தம் 8 பேர் கொல்லப்பட்டனர்.

3 பேரும் சுட்டுக்கொலை

தாக்குதல் நடத்திய தற்கொலைப்படையினர் 3 பேரையும் பாதுகாப்புப் படையினர் சுட்டுக்கொன்று விட்டனர்.

இந்த தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றனர்.

மிர்வாலி எம்.பி. வீட்டில் தலிபான்கள் நடத்தியுள்ள தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷரப் கனி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

"இது மன்னிக்க முடியாத குற்றம். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு எம்.பியின் வீட்டில் தாக்குதல் நடத்தி இருப்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத பெருங்குற்றம்" என அவர் தெரிவித்தார். (இ-3-10)

போகோஹராம் தீவிரவாதிகளிடமிருந்து ஆயிரத்து 880 பொதுமக்கள் விடுவிப்பு

நைஜீரிய இராணுவம் அதிரடி

இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தி போகோஹராம் கோட்டைக்குள் நுழைந்து 1880 பொதுமக்களை விடுவித்தது. ஏராளமான தீவிரவாதிகளையும் கைது செய்துள்ளது.

நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் என்ற தீவிரவாத அமைப்பு செயற்பட்டு வருகிறது. நைஜீரியாவின் வடகிழக்கு பிராந்தியமான போர்னோவில் இவர்கள் அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். கடந்த 2014ஆம் ஆண்டு 200இற்கும் மேற்பட்ட பாடசாலைக் குழந்தைகளை கடத்திச் சென்றனர். மேலும், கிராமத்திற்குள் புகுந்து பொருட்களை சூறையாடி மக்கள் கடத்திச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அப்பகுதியில் உள்ள சாம்பிசா காட்டுப்பகுதியில் சுமார் 1300 சதுர கிலோமீற்றர் அளவிற்கு தங்களது ஆதிக்கத்தை செலுத்தி வந்தனர். இந்தப் பகுதி போகோஹராம் கோட்டையாக விளங்கியது.

நைஜீரிய அரசு இப்பகுதியில் அதிரடி இராணுவ நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது. அதன்படி கடந்த 14ஆம் திகதி காட்டுக்குள் இராணுவம் நுழைந்தது. கண்ணில் படும் தீவிரவாதிகளை சுட்டுக்கொலை செய்த அவர்கள், பிணைக் கைதிகளாக வைத்திருந்த அப்பாவி பொதுமக்களை காப்பாற்றினார்கள்.

கடந்த 14ஆம் திகதி தொடங்கிய வேட்டை நேற்று முன்தினம் வரை நடைபெற்றது. ஒரு வாரமாக நடைபெற்ற இராணுவ வேட்டையில் 1880 பொதுமக்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 564 போகோஹராம் தீவிரவாதிகளை கைது செய்துள்ளனர்.

போகோஹராம் தீவிரவாதிகளால் கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து 20 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 2.6 மில்லியன் மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். (இ-3-10)

ஆப்கானிஸ்தானில் சுமார் 98 தொன் போதைப்பொருள் எரியூட்டப்பட்டது

700 பேர் கைது

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அதிரடித் தேடுதல வேட்டையில், பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 98 தொன் நிறையுடைய போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான துணை உள்துறை அமைச்சர், "இந்த ஆண்டு முழுவதும் ஆப்கானிஸ்தானின் போதைப் பொருள் எதிர்ப்பு பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர் காபூல் மாகாணம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் போதே சுமார் 98 தொன் நிறையுடைய போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டன" எனத் தெரிவித்தார். மேலும் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களில் அபின், ஹெரோயின், மார்பின், கஞ்சா மற்றும் ஏனைய சட்டவிரோத போதைப் பொருட்கள் உள்ளடங்குவதாகவும் இவை எரியூட்டி அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதே வேளை இது தொடர்பாக இவ்வாண்டில் 700 இற்கும் அதிகமான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதே வேளை ஆப்கானிஸ்தானில் அபின் உற்பத்தி கடந்த ஆண்டை விட 43 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த அதிகரிப்பு 4,800 மெற்றிக் தொன் எனக் கூறப்படுகின்றது. (இ-3-10)

மூன்று தலைமுறையினரை காவு கொண்ட தீ விபத்து

ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறையினர் தீ விபத்தில் உயிரிழந்த பரிதாப சம்பவம், நியூசிலாந்தின் தென் ஆக்லாந்து பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் நியூசிலாந்தின் அகதிகள் பேரவை நிறைவேற்று அதிகாரி கைலேஷ் தனபால சிங்கத்தின் குடும்பத்தினரே, இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இதன்போது கடுமையான தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கைலேஷ் தனபாலசிங்கம், உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது. கைலேஷின் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக அவரது 5 வயது மகன், 39 வயதுடைய மனைவி, 65 வயதுடைய மனைவியின் தாயார் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். (இ-3-10)

தனது நுரையீரலை தானம் கொடுத்து வரலாற்றில் இடம்பிடித்த குழந்தை

பிறந்து 41 நாட்களே ஆன பச்சிளம் குழந்தை தனது நுரையீரலை தானம் கொடுத்து உலக வரலாற்றில் நீங்காத இடத்தை பிடித்துள்ளது.

இங்கிலாந்தில் ஒரு பெற்றோருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த குழந்தைக்கு தியோ ஆர்மோண்டி எனப் பெயர் சூட்டினர். 40 நாட்கள் வரை நன்றாக இருந்த அவனுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதனால் அவர் உயிர் பிழைப்பது கடினம் என்று வைத்தியர்கள் கூறினர். இதனால் அவனது பெற்றோர் அவனது நுரையீரலை தானம் செய்ய முடிவு செய்தனர்.

இம்மோகன் போல்டன் என்ற ஐந்து மாத பெண் குழந்தை ஒருவரை அரிய நோயால் பாதிக்கப்பட்டு வந்தார். இதனால் அவளது நுரையீரல் சரியாக செயற்படவில்லை. அவருக்கு இரண்டு முறை நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டும் உடல்நிலை பூரணமாக குணமடையவில்லை.

தற்போது தியோவின் நுரையீரல் தானமாக கிடைக்கப்பட்டுள்ளதால், இமோகனுக்கு மூன்றாவது முறையாக நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

ஆர்மோண்டி தனது நுரையீரலை தானம் கொடுத்துள்ளதால், மிகச்சிறிய வயதில் அதாவது 41ஆவது நாளில் உடல் உறுப்பை தானம் செய்த பச்சிளம் குழந்தை என்ற பெயரை பெற்றுள்ளான். (இ-3-10)

ரஷ்யாவில் நிலநடுக்கம்

ரஷ்யா நாட்டின் நிக்கோல் ஸ்கோய் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிக்கோல்ஸ கோயில் இருந்து சுமார் 79 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டரில் 5.2 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் நிகழ்ந்த இரண்டாவது நிலநடுக்கம் இது ஆகும். கடந்த ஒரு மாதத்தில் 9 நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஒரு ஆண்டில் 24 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இது வரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (இ-3-10)

ஜப்பானில் குழந்தை பிறப்பு 10 இலட்சமாக குறைந்தது

கடந்த ஆண்டு ஜப்பானில் குழந்தை பிறப்பு 10 இலட்சம் ஆக குறைந்துள்ளது. 20 மற்றும் 30 வயதுக்குறைவான பெண்கள் எண்ணிக்கையே இதற்கு காரணம் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. சில ஆண்டுகளாக ஜப்பானில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 1949ஆம் ஆண்டில் குழந்தை பிறப்பு விகிதம் 20 லட்சத்து 69 ஆயிரத்து 600 ஆக இருந்தது. அதை தொடந்து படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டில் 10 லட்சத்து 45 ஆயிரம் ஆக குழந்தை பிறப்பு விகிதம் இருந்தது.

ஆனால் இந்த ஆண்டு குழந்தை பிறப்பு விகிதம் 10 லட்சமாக குறைந்து விட்டது. முதன் முறையாக இதுவே குறைந்த பிறப்பு விகிதமாகும். இது ஜப்பான் அரசை கவலை அடைய செய்துள்ளது. 20 மற்றும் 30 வயதுக்கு குறைவான பெண்கள் எண்ணிக்கையே குழந்தை பிறப்பு விகிதம் சரிவுக்கு காரணம் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் குழந்தைகளை வளர்ப்பதற்கு அதிக செலவு ஏற்படுவதாலும் மக்கள் குழந்தை பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-10)

கருணா குழுவுக்கு ராணுவம் ஆயுதங்களை வழங்கியது

ரவிராஜ் கொலை வழக்கில் புதிய தகவல்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் லக்ஷ்மன் ஆகியோரின் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, கருணா குழுவினருக்கு தம்மால் வழங்கப்பட்டது என்று இலங்கை இராணுவம் நீதிமன்றில் ஒப்புக்கொண்டுள்ளது.

குறித்த ரி-56 ரக துப்பாக்கியானது இராணுவத்தின் மத்திய ஆயுதக் களஞ்சியத்தினூடாக இராணுவ புலனாய்வு படையணிக்கு வழங்கப்பட்டு அங்கிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மூன்றாம் இராணுவப் புலனாய்வு கட்டளை மையத்தினூடாக கருணா குழுவுக்கு வழங்கப்பட்டதாக இராணுவ நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஜயந்த குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நடராஜா ரவிராஜின் படுகொலை வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலகவின் மேற்பார்வையில் விசேட ஜூரிகள் சபை முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இராணுவத் தளபதி சார்பில் நேற்று முன்தினம் மன்றில் முன்னிலையாகியிருந்த இராணுவ நடவடிக்கைப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் ஜயந்த குணவர்த்தன மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் லியனகே ஆகியோர் சாட்சியம் அளித்திருந்தனர்.

குறித்த துப்பாக்கியுடன் சுமார் 150 வரையிலான துப்பாக்கிகளும் யுத்த உபகரணங்களும் கருணா குழுவினருக்கும் இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்பட்ட குழுக்களுக்கும் வழங்கப்பட்டதாகவும் நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி குறித்த ஆயுதங்கள் மேலும் ஒருதொகை ஆயுதங்களும் இராணுவப் புலனாய்வுப் படையணிக்கு விநியோகம் செய்யப்பட்டதாகவும் உளவுத் தகவல்களை சேகரித்து தாக்குதலுக்குத் தேவையான பொறிமுறையை வழங்கும் நோக்கிலேயே இதனை செய்திருப்பதாகவும் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. எனினும் மூன்றாவது புலனாய்வுக் கட்டளை மையத்திலிருந்து செயற்பட்ட நட்புக் குழுக்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் எந்தவித ஆவணங்களும் தரவுப்படுத்தப்படவில்லை என்று சாட்சியாளர்கள் மன்றில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுத ரீதியில் தோற்கடிப்பதற்கான ஓரங்கமாக ரி-56 ரக துப்பாக்கியையும் வேறு சில ஆயுதங்களையும் கருணா குழுவுக்கு வழங்கியதை இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் ஓய்வுப்பெற்ற மேஜர் ஜெனரலுமான லியனகே நீதிமன்றில் ஒப்புக்கொண்டார். இந்த சாட்சியத்துடன் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரின் சாட்சியத்தை பதிவு செய்த நீதிமன்றம் முறைப்பாட்டாளர் தரப்பு விசாரணைகளை நிறைவுக்கு கொண்டு வந்தது. (இ-3-10)

கொழும்பில் இலகு ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானம்- ரவி

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதிகளில் வாகன நெரிசலை குறைப்பதற்காக இலகு ரயில் சேவை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்குள் வாகனங்கள் பிரவேசிக்கும் ஏழு பிரதான நுழைவாயில் பிரதேசங்களை இனங்கண்டு அங்கிருந்து இலகு ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த துரித நடவடிக்கைகளுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாளுக்கு நாள் கொழும்பு நகரத்திற்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் வாகன நெரிசலை குறைப்பதற்கான மாற்று வழிகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

களனி பாலத்திலிருந்து துறைமுகத்தை இணைக்கும் வீதி நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான கட்டுமான வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

புதிய களனி பாலத்தையும் அத்துருகிரிய நகரத்தையும் இணைக்கும் புதிய வீதி அமைக்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டத்தின் யோசனைகளை அமுலாக்குவது தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போது அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டார். (இ-3-10)

ஜனவரி மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு மூடப்படவுள்ள கட்டுநாயக்க விமான நிலையம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதைகள் புனர் நிர்மாணத்திற்காக 3 மாதங்களுக்கு மூடப்படவுள்ளது.

ஜனவரி 6 ஆம் திகதி முதல் ஏப்ரல் 5 ஆம் திகதி வரை மு.ப 08.30 முதல் பி.பகல் 04.30 மணிவரை விமான நிலையம் மூடப்படும் என போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நிர்மாணப் பணிகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு கூறிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

7.2 பில்லியன் ரூபாய்கள் செலவிடப்படும் இந்த புனர்நிர்மாண திட்டம் மூலம் 3,350 மீற்றர் நீளம், 45 மீற்றர் அகலம் மேலதிக ஓடுபாதை நிர்மாணிக்கப்படவுள்ளது.

1986 இல் நிர்மாணிக்கப்பட்ட ஓடுபாதைகளே இங்கு காணப்படுவதாகவும் சர்வதேச விமான நிறுவனங்கள் ஓடுபாதைகளை புனரமைக்குமாறு கடந்த 10 வருடங்களாக இலங்கை விமான அதிகார சபைக்கு தெரிவித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

சிங்கமலை காட்டுக்குள் தீ; பல ஏக்கர்கள் எரிந்து நாசம்

(கொழும்பு)

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் டிக்கோயா நகரப்பகுதிக்கு குடிநீர் வழங்கும் சிங்கமலை பாதுகாப்பு வனப்பிரதேசத்தினுள் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட காட்டுத் தீயினால் பல ஏக்கர்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய மாகாணத்தில் வறட்சியான காலநிலை காணப்படுவதனால் தீ வேகமாக பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ காரணமாக இங்கு காணப்படும் அரிய வகை தாவரங்கள், விலங்குகள் அழிக்கப்பட்டு இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீயினால் நீரூற்றுக்கள் அற்றுப் போவதனால் எதிர்காலத்தில் குடிநீர்ப்பஞ்சம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

தீயானது காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்கு வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-10)

கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்காத வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு வலியுறுத்தியும் கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இ.தம்பையாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக தொழில் ஆணையாளர். சட்டமா அதிபர் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழிற்சங்கங்கள், 22 தோட்ட நிர்வாகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சட்டத்திற்கு முரணாகவும் தொழிலாளர் நலன்களுக்கு எதிராகவும் கூட்டு ஒப்பந்தம அமைந்துள்ளதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சட்டத்திற்கு முரணான கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறும் சட்டத்திற்கு முரணான விடயங்களை கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து நீக்கி புதிய கூட்டு ஒப்பந்தத்தை தொழில் ஆணையாளர் மேற்கொள்ள உத்தரவிடுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-3-10)

அம்பாந்தோட்டை உடன்பாடு தொடர்பில் முழு விபரங்களையும் அம்பலப்படுத்துக

ஹெல உறுமய அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சீனா வின் மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் செய்துள்ள புரிந்துணர்வு உடன்பாடு பற்றிய முழுமையான தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த வர்ணசிங்க,

சீனாவுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்பாட்டின் விதிகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஒலுவில், காலி போன்ற துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த உடன்பாடு தடையாக இருக்குமா? என்பது பற்றி அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்.

அதைவிட, 100 மில்லியன் டொலர் தரகுப் பணம் கைமாறியிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள்சுமத்தப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையில் சீன நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ள நிலம் தொடர்பாகவும் முரண்பாடான அறிக்கைகள் வெளியாகின்றன.

மிகப்பெரிய நாடான இந்தியாவில் உள்ள மிகப் பெரிய கைத்தொழில் வலயமான, மும்பை கைத்தொழில் வலயம் கூட, 7000 ஏக்கரில் தான் அமைந்துள்ளது. எதற்காக அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயத்துக்கு 15 ஆயிரம் ஏக்கர் ஒதுக்கப்படுகிறது என்று தெரியவில்லை.

இலங்கையில் உள்ள 14 கைத்தொழில் வலயங்களும் 3000 ஏக்கர் நிலத்தில் தான் அமைந்துள்ளன.

அரசியலுக்கு மட்டுமே நல்லாட்சி அல்ல. பொருளாதாரத் துறையிலும் நல்லாட்சி இருக்க வேண்டும். எந்தவொரு வர்த்தக அல்லது வேறு உடன்பாட்டையும் செய்து கொள்ளும் போது, வெளிப்படைத்தன்மை முக்கியம்.பாரிய ஊழல்களினால் தான் மகிந்த அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர்.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு தொடர்பான எல்லா விடயங்களையும் பகிரங்கப்படுத்தி தெளிவுபடுத்தாவிடின், தற்போதைய ஆட்சியாளர்கள் மீதும் அதே பழி விழும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-3-10)

சமையலறைக்கு பாவிக்கும் உடைகளில் புத்தரின் உருவம்

புத்தரின் உருவம் பொறிக்கப்பட்ட சமையலறையில்பயன படுத்தப்படும் கையுறை மற்றும் சமையலறைக்கு பயன்படுத்தப்படும் பாதுகாப்பு அங்கி (ஏப்ரன்) ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தியாவின தூத்துக் குடியில் இருந்து கொண்டு வரப்பட்ட கொள்கலன் ஒன்றில் சுங்கத் திணைக்களத்தினர் சோதனை மேற்கொண்ட போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை சட்டத்தின் அடிப்படையில் எந்தவொரு மதம் சார்ந்த உருவங்கள் பொறிக்கப்பட்ட உபகரணங்கள் தடை. செய்யப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கத் திணைகளம் மேற்கொண்டு வருகின்றது. (இ-3-10)

தொல்பொருள் மதிப்புள்ள தளங்களை பாதுகாப்பது குறித்து கலந்துரையாடல்

பொதுபல சேனாவும் பங்கேற்பு

வரலாற்று மற்றும் தொல்பொருள் மதிப்புள்ள தளங்களை பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

தொல்பொருள் மதிப்புள்ள தளங்களை பாதுகாக்க ஒரு கூட்டு பொறிமுறை தேவைப்படுவதாக ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது மாறிய ஆபத்துக்களை எதிர்கொண்டு மற்றும் பாதுகாப்பற்ற விதத்தில் காணப்படும் வரலாற்று மற்றும் தொல்பொருள் மதிப்புள்ள தளங்களை இனம் கண்டு, அவற்றை தொல்பொருள் மதிப்புள்ள தளங்களாக அறிவிக்க விரைவான திட்டங்களை வகுப்பது தொடர்பிலும் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

மேதானந்த எல்லாவல தேரர், கலகொட அத்தே ஞானசார தேரர், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, துயாகமகே, தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேனரத் திஸாநாயக்க உட்பட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (இ-3-10)

இன்று ஒரு தகவல்

ஆகாத செயல்களுக்காக அலையலாமா?

பிறர் செயலைச் சொல்லும் போதே அது வேஸ்ட், இது வேண்டாம் என்று சொல்லி வைத்தால் அதை மற்றவர்கள் அபசகுனமாக எடுத்துக் கொள்வதோடு நம்முடைய அன்பையும் நட்பையும் விலாசத்தையும் சேர்த்துச் சந்தேகிக்கிறார்கள்.

ஒரு கடை முதலாளி தன்னிடம் பணிபுரியும் விற்பனையாளரிடம் தினமும் ஆயிரம் ரூபாய் தான் விற்பனை ஆகிறது. இது எனக்குக் கட்டாது. தினமும் இதை மூவாயிரம் ஆக்க வேண்டும் என்று சொல்லுகிறார் என வைத்துக் கொள்வோம்.

உடனே அந்த விற்பனையாளர்,சார்! இதே தெருவில் நம் கடையைப் போல நான்கு கடைகள் இருக்கின்றன. நிச்சயம் நம் விற்பனை பெருகாது என்றா சொல்வது? கூடாது. அவசியம் உயர்த்திவிடுவோம் சார்! என்று சொல்லி முயற்சி எடுத்துப் பார்த்து, யோசனைகள் பல சொல்லி, கடுமையாக உழைத்து , உருண்டு புரண்டு பார்த்து, என்ன செய்தாலும் நம் தலையெழுத்து இவ்வளவு தான் என்பதை முதலாளி தானே உணரும்படி செய்ய வேண்டுமே தவிர, எடுத்தவுடன் அபசகுனமாகப் பேசக் கூடாது. அப்படிச் செய்தால் அவர் முதல் வேலையாக இந்த ஆளை எப்போது வீட்டுக்கு அனுப்பலாம் என்று காரணம் தேடத் தொடங்கிவிடுவார்.

சின்ன விடயம் என்றாலும் இப்படித் தான். டேய் காய்கறி வண்டி போகுதடா! சவ்விடுடா என்று அக்கா, தம்பியைப் பார்த்துச் சொல்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அடப் போக்கா! அவன் போய் எவ்வளவோ நேரம் ஆச்சு! அடுத்த தெருவுக்குப் போயிருப்பான். நாளைக்கு வாங்கிக்கோ என்று சொல்வதை நிறுத்திவிட்டு, நிச்சயமாகத் தெரிந்த போதும், எழுந்து வாசல்வரை ஓடிப் போய்ப் பார்த்துவிட்டு அவன்போயிட்டாங்கஅக்காஎன்றுசொல்வது தான் முறை. இது பிரியத்தை வளர்க்கும்.

சில உறவினர் – நண்பர்கள் இருக்கிறார்கள், ஆகாத காரியத்திற்காக ஊரிலிருந்து கடிதம் போடுவார்கள். இதெல்லாம் நடக்கிற காரியமா? என்று நமக்குள் கேட்டுக் கொண்டு சும்மா இருந்துவிடக் கூடாது. கொஞ்சமாவது முயற்சி எடுத்துக்கொண்டு, இருக்கும் நிலவரங்களைத் தெரிந்து கொண்டு அவற்றை அப்படியே எழுதிவிட வேண்டும்.

காரியம் ஆகிறது -- ஆகவில்லை என்பது வேறு விடயம், இந்த மனிதர் பதில் கூடப் போடவில்லை. கொஞ்சம் கூட அக்கறையில்லை. உதவி மனப்பான்மையே கிடையாது. நம்மையெல்லாம் மதிப்பதே இல்லை என்றெல்லாம் கடிதம் போட்டவர்கள் சிந்தனை செய்யவும் நிந்தனை செய்யவும் இடம்தரக் கூடாது பாருங்கள்.

நம்பிக்கையூட்டாமல், உங்கள் கடிதம் கிடைத்தது. நாளையே முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என நாலு வரி எழுதிப் போட்டால் போதும். காரியம் ஆகாவிட்டாலும் கூடப் பரவாயில்லை!

சேனா தாயிழ்வாணன்

தென்னாலிராமன் விற்ற குதிரை

ஒரு சமயம் தெனாலிராமனுக்கு உடல் நலம் மோசமாகி விட்டது. வைத்தியரும் வந்து பார்த்தார். வைத்திய செலவு நிறைய ஆகும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

வைத்திய செலவுக்கு தெனாலிராமனிடம் பணம் இல்லை. ஆகையால் அவ்வூரில் வட்டிக்கு கொடுக்கும் சேட்டை அணுகினான். அதற்கு சேட்டும் "பணத்தை எப்போது திருப்பிக் கொடுப்பாய்" என்று கேட்டார்.

தெனாலிராமனும் உயர் ஜாதி அரேபியக் குதிரை வைத்திருந்தான். நல்ல விலை போகும் அதனால் உடல் நலம் தேறியதும் குதிரையை விற்றுப் பணம் தருவதாகச் சொன்னான். அவன் சொன்னதின் பேரில் சேட்டும் நம்பிக்கையோடு பணம் கொடுத்தான்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன் வைத்தியரிடம் சென்று சிகிச்சையை ஆரம்பித்தான். விரைவில் குணமும் அடைந்தான்.

பல மாதங்கள் ஆயின. தெனாலிராமனிடமிருந்து பணம் வருவதாகத் தெரியவில்லை. ஆகையால் சேட் தெனாலி ராமனை சந்திக்கப் புறப்பட்டான்.

தெனாலிராமனைப் பார்த்து "என்னப்பா, உடல் குணமானதும் குதிரையை விற்றுப்பணம் தருவதாக சொன்னாயே. இன்னும் தரவில்லையே உடனே கொடு" என்றான். தெனாலி ராமனும் நன்கு யோசித்தான். அநியாய வட்டி வாங்கும் சேட்டுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினான்.

"சரி குதிரையை விற்றுப் பணம் தருகிறேன். என்னுடன் நீயும் வா" என்று அவனையும் அழைத்துக் கொண்டு பக்கத்து ஊரில் நடக்கும் சந்தைக்குப் புறப்பட்டனர். போகும் போது குதிரையையும் கூடவே ஒரு பூனையையும் அழைத்துச் சென்றான்.

சந்தையில் தெனாலிராமனின் பளபளப்பான குதிரையைப் பார்க்க பெரிய கூட்டமே கூடி விட்டது. அப்போது ஒரு பணக்காரன் தெனாலிராமனைப் பார்த்து "உன் குதிரை என்ன விலை" என்று கேட்டான்.

அதற்கு தெனாலி ராமனோ "குதிரையின் விலை 1 பவுன் தான். இந்த பூனையின் விலையோ 500 பவுன். ஆனால் இந்த பூனையையும் சேர்த்து வாங்கினால் தான் இக்குதிரையைக் கொடுப்போன்" என்றான்.

தெனாலிராமனின் பேச்சு அவனுக்கு விநோதமாக இருந்தாலும் குதிரையை வாங்க வேண்டும் என்ற மிகுந்த ஆவலில் 501 பவுன் கொடுத்து குதிரையையும் பூனையையும் வாங்கிச் சென்றான்.

பின் சேட்டிடம் ஒரு பவுனை மட்டும் கொடுத்தான். ஆனால் ஒரு பவுனை சேட் வாங்க மறுத்து விட்டான். "குதிரை அதிக விலைக்குப் போகுமென்று நினைத்து தானே உனக்குப் பணம் கொடுத்தேன். நீ இப்படி ஏமாற்றுகிறாயே" என்றான்.

அதற்கு தெனாலிராமன் "ஐயா சேட்டே குதிரையை விற்றுத்தான் உமக்குப்பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதனபடியே குதிரையை 1 பவுனுக்கு விற்று அந்த 1 பவுனையும் உனக்கே கொடுத்து விட்டேன் நீ வாங்க மாட்டேன் என்கிறாயே! இது என்ன நியாயம்" என்றான்.

இறுதியில் இவர்கள் வழக்கு மன்னர் கிருஷ்ண தேவராயரிடம் சென்றது.

மன்னர் இவ்வாழ்க்கை ஆதியோடு அந்தமாக விசாரித்தார். பின் தெனாலிராமன் செய்தது சரியே என்று தீர்ப்புக் கூறினார்.





இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016 24

- 1690 - யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.
- 1715 - சுவீடனின் துருப்புகள் நோர்வேயை ஆக்கிரமித்தன.
- 1777 - கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.
- 1851 - வாஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிடித்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.
- 1906 - ரெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.
- 1924 - அல்பேனியா குடியரசாகியது.
- 1954 - லாவோஸ் விடுதலை பெற்றது.
- 1966 - தெற்கு வியட்நாமில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 129 பேர் கொல்லப்பட்டனர்.
- 1968 - மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தில் நுழைந்தது.
- 1974 - ஆஸ்திரேலியாவில் டார்வின் நகரில் சூறாவளி ட்ரேசி தாக்கியதில் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - யோசப் பரராஜசிங்கம் படுகொலை: இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிறப்புகள்

- 1818 - ஜேம்ஸ் பிரெஸ்காட் ஜூல், ஆங்கில இயற்பியலாளர். (இ. 1889)
- 1822 - சார்ல்ஸ் ஹெர்மைட், ஒரு பிரெஞ்சு கணிதவியலர். (இ. 1901)
- 1837 - பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரியின் அரசி .. (இ. 1898)
- 1881 - வான் ரமோன் ஹிமெனெஸ், எசுப்பானியக் கவிஞர். ஜஇலக்கியத்திற்கான நோபல் பரிசு:நோபல் பரிசு பெற்றவர் .(இ. 1958)
- 1905 - ஹோவார்ட் ஹியூஸ், அமெரிக்கப் பொறியாளர். (இ. 1976)
- 1924 - முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர். (இ. 1980)
- 1944 - ஆஸ்வால்டு கிராசியாஸ், இந்தியப் பேராயர்.
- 1957 - ஹமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்.
- 1959 - அனில் கபூர், இந்திய நடிகர்.
- 1969 - எட் மிலிபாண்ட், பிரித்தானிய அரசியல்வாதி.
- 1971 - ரிக்கி மாட்டின், ஸ்பானியப் பாப் பாடகர்.

இறப்புகள்

- 1524 - வாஸ்கோ ட காமா, போர்த்துக்கீச மாலுமி. (பி. 1460)
- 1950 - பி. ஜி. வெங்கடேசன், திரைப்பட நடிகர்.
- 1973 - ஈ. வெ. ராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் .(பி. 1879)
- 1987 - எம். ஜி. இராமச்சந்திரன், தமிழ்நாட்டின முதலமைச்சர், திரைப்பட நடிகர். (பி. 1917)
- 1997 - டோஷிரோ மிபூன், யப்பானிய நடிகர் . (பி. 1920)
- 2002 - வி. கே. ராமசாமி, தமிழ் திரைப்பட நடிகர் . (பி. 1926)
- 2005 - ஜோசப் பரராஜசிங்கம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர். (பி. 1934)
- 2005 - பி. யானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை. (பி. 1925)
- 2008 - ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் . (பி. 1930)

சிறப்பு நாள்

- லிபியா - விடுதலை நாள் . (1951)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	தீருநெல்வேலி	நெல்லியடி	சுன்னாகம்	காங்கேசன்	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	40	100	40	40	60	40
உருளைக்கிழங்கு	120	100	110	100	120	120
பலாமிளகாய்	140	100	120	100	160	100
தக்காளி	100	100	100	70	100	80
மரவள்ளிக்கிழங்கு	60	80	50	60	60	60
கோவா	30	50	30	30	40	40
கரட்	100	100	80-140	100	160	100
பூசணி	50	60	50	40	60	50
பீற்றூட்	70	70	80	60	80	70
வாழைக்காய்	60	60	40	50	80	50
சின்ன வெங்காயம்	100	120	100	100	140	80
பெரிய வெங்காயம்	100	120	100	100	120	100
பாகற்காய்	300	400	300	250	280	300
வெண்டிக்காய்	80	100	80	80	120	80
கருணைக்கிழங்கு	60	100	50	60	80	50
பயற்றங்காய்	140	120	240	100	140	120
லீக்ஸ்	100	120	80	100	120	100
பீற்றூட்	60	120	60	70	100	70
கறிமிளகாய்	200	120	200	160	200	120
முருங்கைக்காய்	400	–	400	400	280	–
பேரிஞ்சி	150	100	130	100	100	120
கத்தரித்தம்பாள	30	30	30	30	50	40
தீரை- பிடி	30	50	40	30	50	40
தேசிக்காய்	350	400	350	300	250	300
தேங்காய்(ஒன்று)	40	50	50	35	40-50	50
இராவெள்ளி	300	400	280	–	200	400
வெங்காயப்பூ	300	200	240	240	–	200
முள்ளங்கி	60	100	80	60	80	60
பொன்னாங்காணி	40	40	30	30	40	30
வல்லாரை	15	30	10	20	20	25
பரங்கி	60	120	80	60	120	70

ஜனவரி 1 முதல் தரச் சான்றிதழ் அற்ற தலைக்கவசங்களுக்குத்தடை

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதி முதல் தரச் சான்றிதழ் இல்லாத தலைக்கவசங்களை சந்தைக்கு விநியோகிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வீதி பாதுகாப்பு சம்பந்தமான தேசிய சபையின் தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

தரச் சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்கள் தயாரிப்பதை பதிவு செய்வதற்காக டிசெம்பர் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்ததாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

அதன்படி ஜனவரி முதலாம திகதி முதல் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் தரச் சான்றிதழ் அற்ற தலைக்கவசங்களை சந்தைக்கு விநியோகிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

இலங்கையில் தலைக்கவசங்களை தயாரிக்கும் 6 நிறுவனங்களில் 2 நிறுவனங்கள் தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளன.

இந்த மாதம் இறுதியாகும் போது ஏனைய நிறுவனங்களுக்கும் தரச்சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை நிறைவடையும் என்று அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மோடார் சைக்கிள் விபத்துக்களினால் உயிரிழக்கும் மற்றும் காயமடையும் வீதம் அதிகரிப்பதால், அதனை தடுக்கும் விதமாக புதிய தர முறை ஒன்றை அறிமுகம் செய்யும் தேவை ஏற்பட்டிருப்பதாக வீதி பாதுகாப்பு சம்பந்தமான தேசிய சபையின் தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்தார். (இ-3-10)

நல்லிணக்கத்தை ஏற்படுத்த கிறிஸ்தவ சமூகம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்- மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

இனங்களுக்கு இடையில சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சவால்களை வெற்றிகொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனமேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு கிறிஸ்தவ சமூகம் ஒத்துழைப்பு வழங்கும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய நத்தார் விழாவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையில் பல்மத மற்றும் பல்லின மக்கள் வாழ்ந்து வருவதாகவும் அனைத்து தரப்பினரிடையேயும் சமாதானத்தை கட்டியெழுப்ப வேண்டி சவால் ஜனாதிபதிக்கு காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சவாலை வெற்றி கொள்ளும் ஜனாதிபதியின் முனைப்புக்களுக்கு கிறிஸ்தவ சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பு உண்டு என அவர தெரிவித்தார். (இ-3-10)

14 நாட்களுக்குள் தீர்வு வழங்காவிட்டால் ஜனாதிபதி,பிரதமருக்கு கடிதம் வராது

தபால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் 14 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத்தர அரசாங்கம் முன்வராது போனால், ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை உட்பட அரச நிறுவனங்களுக்கான தபால் விநியோகம் இடைநிறுத்தப்படும் என கூட்டு தபால் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.

முன்னணியின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார இதனைக் குறிப்பிட்டுள்ளார். தபால் சேவை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையின் பின்னால் எந்தவொரு அரசியல் நோக்கங்களும் கிடையாது எனவும் பொது நலன்களே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களுடன் விளையாட்டுக் காட்டாமல் அவர்களது தேவைகளுக்கு செவிசாய்க்குமாறும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். (இ-3-10)

ஜாலிய விக்ரமசூரியவுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

அமெரிக்காவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவை எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் இலங்கைத் தூதுவராக செயற்பட்ட காலப்பகுதியில் தூதுவர் காரியாயையம் ஒன்றை கொள்வனவு செய்தபோது 3 இலட்சத்து 20 ஆயிரத்திற்கும் அதிகமான அமெரிக்க டொலரை முறையற்ற வகையில் கையாண்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி பிரிவினரால் ஜாலிய கைது செய்யப்பட்டார்.

ஜாலிய விக்ரமசூரிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

வரலாற்றில் என்றுமில்லாதவாறு டொலரின் பெறுமதி அதிகரிப்பு

வரலாற்றில் முதல் தடவையாக அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 152 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 152 ரூபா 12 சதமாக அதிகரித்துள்ளது.

கடந்த காலத்தில் டொலரின் விலை அதிகரிக்கும் போதெல்லாம் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்துள்ளதைக் காட்டுவதாகவும் கூறப்படுகின்றது.

வங்கிகளில் அமெரிக்க டொலர் பற்றாக்குறை நிலவுவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வங்கிகளில் டொலர் பற்றாக்குறை இல்லையென தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 936

Search for people, places and things — Nagendram Home

சிந்து

நீ
நீயாக வாழ கற்றுக்கொள்
சிலர் உன்னை விரும்புவார்
சிலர் உன்னை வெறுப்பார்
கவலை படாதே
இது உன் வாழ்க்கை

சங்கவி

பவான்

கபிலன்

ரூபி

ராகுலன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



2020 இல் அமையப் போகும்

ஸ்ரீல. சு.க.அரசாங்கத்தின் பிரதமர் சமல் ராஜபக்ஷ

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அமைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் பிரதமராக வருவதற்கு மிகவும் அருகதையுடையவர் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே என ஸ்ரீல.சு.கட்சியின் ஊடகப் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமாகிய டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதும், ஸ்ரீ ல.சு.கட்சியையும் அதன் தலைமையையும் மிக மரியாதையாக நோக்குபவராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரராக இருந்தபோதிலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தங்கலையில் நடைபெற்ற கூட்டமொன்றில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் கடந்த அரசாங்கத்தை விமர்சனம் செய்திருந்தார். கட்சிக்காக சரியாக செயற்படும் ஒருவராக அவர் காணப்படுகின்றார் எனவும் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். (இ-3-10)

2 வருடத்தில் உப்பு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் இலங்கை

அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

உப்பு உற்பத்தியில் இன்னும் இரு வருடங்களுக்குள் இலங்கை தன்னிறைவு அடையுமெனவும் அதற்கான பல்வேறு திட்டங்களை கைத்தொழில் வர்த்தக அமைச்சு ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

தென்னாசிய செயற்பாட்டு தளத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் இயங்கி வரும் ஐக்கிய நாடுகள் செயற்பாட்டுத் தலைவர் சுதிர் என் முரளிதாஸ் தலைமையிலான தூதுக்குழுவினர் அமைச்சர் றிசாத் பதியுதீனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயற்பாட்டு நிர்வாகம் இலங்கையில் முன்னெடுத்து வரும் திட்டங்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில ஐ.நா. செயற்பாட்டு நிறுவனம மேற்கொண்டு வரும் வெற்றிகரமான பணிகளுக்காக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் இதன்போது தெரிவித்தார்.

இந்த சர்வதேச நிறுவனமானது எதிர்காலத்திலும் இலங்கைக்கு ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் இருக்கின்றன. அவைகளை நாம அடையாளம் கண்டுள்ளோம்.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக இருக்கின்ற போதும் உப்பிற்கு தட்டுப்பாடே நிலவுகின்றது. உப்பை நாங்கள் இறக்குமதி செய்கின்ற துர்ப்பாக்கிய நிலையிலேயே இன்னும் இருப்பதால் எனவே எமது கடல் வளத்தைப் பயன்படுத்தி உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாம் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தை வளப்படுத்துவதற்கு அங்கேயுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். எனவே ஐ.நா. செயற்பாட்டு நிறுவனம் இந்த முயற்சிக்கு உதவுவதோடு கீழக்கிலும் நாங்கள் அடையாளங்கண்டுள்ள பிரதேசங்களில் உப்பு விளைச்சலை அதிகரிக்க உதவவேண்டும்.

அத்துடன் இலங்கையின் தேவைப்பொருட்கள் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் ஐ.நா. செயற்பாட்டு நிறுவனத்தின் உதவியைக் கோருகின்றோம்.

இந்த முயற்சியில் இலங்கை அரசும் வழங்குநர்களும் ஐ.நா. செயற்பாட்டு நிறுவனமும் இணைந்து பணியாற்றுவதன் மூலம் உரிய இலக்கை அடைய முடியுமென அமைச்சர் தெரிவித்தார். (இ-3-10)

இருட்டறையில் எனது வாழ்வு

25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 19

"நளினியைக் காப்பாற்ற முயன்றால் உன்னை காப்பாற்ற முடியாதுப்பா. என்ன செய்வது என்று கூறினார். அதற்கு என் கணவர் என்னைக் காப்பாற்ற முடியாமல் போனால் பரவாயில்லை. என் குழந்தைக்கு அம்மாவாவது இருந்தாக வேண்டும். நளினியை எப்படியாவது காப்பாற்றிவிடுங்கள். அதுவே எனக்குப் போதும். என்னைப் பற்றி கவலையில்லை என்ற உறுதியைக் கொடுத்திருக்கிறார்."

...அந்தச் சூட்சுமத்தை என்னவென்று கூற? அதில் ஒரு சிலதையே இங்கே பதிவு செய்திருக்கின்றேன். ஏதோ நான் தான் தீவிரவாதியைப் போலவும், நான்தான் திட்டமிட்டு பலரையும் சிக்க வைத்ததைப் போலவும் பல கதைகள் வெளியே இருக்கின்றன. எல்லோரையும் போலத் தான் நானும் ஒரு அப்பாவி என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒருபுறம் 'கறுப்பு' பிரசாரங்கள் உண்மைகளைத் நடுத்துவிட்டது. மறுபுறம் அதிகாரமிக்க சி.பி.ஐயின் அரசு இயந்திரம் செய்த அகோரத்தனமான பொய்ப் பிரசாரம் பாய்ந்து தடுத்தது. நெஞ்சில் சிறிதும் ஈரமில்லாமல், மனதில் சிறிதும் கூச்சம் இல்லாமல் என் மீது அபாண்டமான அவதூறுகளை வீசும்போது நான் தடுக்கக் கூடாதா..? என் மீது வீசியடிக்கப்பட்ட சாக்கடைச் சேறுகளை நான் கழுவிடக்கூடாதா? அதைத் தான் இப்போது இந்தப் புத்தகத்தின் வாயிலாக செய்திருக்கின்றேன். அனைத்துக்குமே ஆதாரங்களை வைத்துக்கொண்டு தான் கூறுகின்றேன்.

உண்மையில் நான் யார்? என் குடும்பப் பின்னணி என்ன? எப்படி இந்த வழக்கிற்குள் சிக்கினோம்? எங்கள் குடும்பமே கைது செய்யப்பட்டதே, எப்படி? கைது செய்யப்பட்டதில் இருந்து எனக்கு நடந்த சித்திரவதைகள் என்ன? விழுந்த அவமான அடிகள் எவ்வளவு? கழுத்தைச் சுற்றிய சுதிகள் எத்தனை?... என்ற அடுக்கடுக்கான கேள்விகள் பல கழித்துத்தான் தாமதமாக எனக்குத் தெரிய வந்தது. அப்போது நானும் என் கணவரும் எப்படி எல்லாம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தோம் என்பது யாருக்கும் தெரியாது. ஏன் எங்களுக்காக சட்டத்தரணியாக முன் வந்தவர்களும்கூட தடுக்கப்பட்டிருந்தார்கள்.

அவற்றை எல்லாம் மீறி மூத்த சட்டத்தரணியான எஸ்.துரைசாமி, ராமதாஸ் ஆகியோர் எனக்காக வழக்காட முன்வந்தார்கள்.

உச்ச நீதிமன்ற விசாரணைக்கு சில நாட்கள் முன்பாக (1999 இல்) மூத்த சட்டத்தரணி ஒருவர் என் கணவரிடம் சென்றார். "உன்னைக் காப்பாற்ற முயற்சி எடுத்தால் நளினியை காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

நளினியைக் காப்பாற்ற முயன்றால் உன்னை காப்பாற்ற முடியாதுப்பா. என்ன செய்வது" என்று கூறினார். அதற்கு என் கணவர், "என்னைக் காப்பாற்ற முடியாமல் போனால் பரவாயில்லை. என் குழந்தைக்கு அம்மாவாவது இருந்தாக வேண்டும். நளினியை எப்படியாவது காப்பாற்றிவிடுங்கள். அதுவே எனக்குப் போதும். என்னைப் பற்றி கவலையில்லை" என்ற உறுதியைக் கொடுத்திருக்கிறார்.

அதே சட்டத்தரணி, பிறகு என்னிடம் வந்தார். "உங்களைக் காப்பாற்ற முயன்றால் மற்ற ஏழு பேரையும் காப்பாற்ற முடியாமல் போகும்மா" என்று உருகி பேசினார். நடுங்கிப் போன நான், 'என் உயிர் போனாலும் பரவாயில்லை சார், மற்ற ஏழு பேரையும் எப்படியாவது காப்பாற்றினால் போதும். வேண்டுமானால் இப்போதே நான் எழுதிக் கொடுத்து விடுகிறேன்' என்று கூறிவிட்டேன். அந்த ஏழு பேரில் என் கணவரும் ஒருவர். அவர் தப்பித்தால் குழந்தைக்கு அப்பாவாவது இருக்கிறார் என்ற திருப்தியில் என் உயிர் போகும். அந்த நிலைப்பாடு தான் என்னால் மற்ற ஏழு பேரின் விடுதலையும் பாதிக்கக்கூடாது எனக் கூறினேன். (அப்போது 26 பேரில் எட்டுப் பேரை மட்டும் விசாரணைக்கு எடுப்போம் என நீதிபதிகள் கூறியிருந்தார்களாம்.

அதனால்தான் இப்படி ஒரு பேச்சு ஓடியது) அதனால்தானோ என்னவோ எங்களுக்குச் சாதகமான விவரங்கள் அங்கே முன் வைக்கப்படாமல் விட்டார்கள்.

(வலிகள் தொடரும்...)

பேரறிவாளன் சாந்தன் முருகன்

சிறுநீரக மோசடி; ஏழு இந்தியர்களுக்கும் ஜனவரி 6ஆம் திகதி வரை மறியல் நீடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை குற்றச் சாட்டில் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட 7 இந்தியப் பிரஜைகளுக்கு மான விளக்கமறியல் தொடர்ந்தும் ஜனவரி மாதம் 6ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்தியப் பிரஜைகள் எழுவரும் நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான் எஸ்.எஸ். மாஹ்பி முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் சட்டவிரோதமாக தங்கியிருந்த குற்றச் சாட்டில் இந்தியப் பிரஜைகள் 8 பேர் கடந்த பெப்ரவரி மாதம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் சட்டவிரோத சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டதோடு மிரிஹானை தடுப்புக் காவலில் இவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவ்வாறு தடுக்கப்பட்டிருந்த நிலையில் இவர்களில் ஒருவர் தப்பிச்சென்றிருந்ததோடு ஏனைய 7 பேரும் அதற்குப் பின்னர் தப்பிச் சென்றனர்.

எனினும் குறித்த 7 பேரும் மன்னார் பேசாலையில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கான விளக்கமறியல் ஜனவரி 6ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

68 பாடசாலைகளுக்கு ஜனவரி 16 வரை பூட்டு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை கடந்த 17 ஆம் திகதி நிறைவடைந்தது.

இந்த நிலையில் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்களின் முதல் கட்ட திருத்தும் பணிகள் ஜனவரி 2 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையில் இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறிப்பாக இவற்றில் 68 பாடசாலைகள் முழுமையாக பயன்படுத்தப்படுவதால் இவை அடுத்த வருடம் முதலாம் தவணைக்காக ஜனவரி 16 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பரீட்சை வினாத்தாள்களின் திருத்தும் பணிகளுக்காக 68 பாடசாலைகள் பூட்டப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-10)

2020ஆம் ஆண்டு நிச்சயம் சு.க. ஆட்சியமைக்குமாம்

இசுறு தேவப்பிரிய நம்பிக்கை

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியை உருவாக்க சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் தேர்தல்களை வெற்றி கொள்ளவே சகல நடவடிக்களையும் முன்னெடுத்து வருகின்றது.

அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தனித்து இயங்கும் கட்சிகளும் முக்கியமான சந்தர்ப்பங்களில் கைகோர்த்து செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

பயணச்சீட்டு இன்றி பயணித்த 80 பேர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து காலிக்கு பயணித்த ரயில்களில், பயணச்சீட்டு இன்றி பயணித்த 80 பேரை நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளதாக ரயில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 10 பெண்களும் வியாபாரிகள் மூவரும் உள்ளடங்குவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவர்களில் 75 பேருக்கு தலா 3,050 ரூபாய் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் ஐவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-3-10)



பதில் சொல்லுங்கள் பன்னீர்செல்வம்

இந்தியர்களை இந்தியர்களே ஆண்டுகொள்ளும் ஜனநாயக முறைக்கான ஆரம்ப கட்டுமானங்களில் ஒன்று இன்றைய தமிழகச் சட்டப்பேரவையும் தலைமைச் செயலகமும். தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வளாகத்திலுள்ள தலைமைச் செயலாளர் ராம மோகன ராவ் அறையில், அவர் முறைகேடில் ஈடுபட்டிருக்கும் சந்தேகத்தில் வருமான வரித்துறையினர் சோதனையிட்ட நாளன் தமிழ் நாட்டின் அரசியல் -- அரசு நிர்வாக வரலாற்றின் மறுப்பு நாட்களில் ஒன்று.

இப்படியொரு நாளும் வரும் என்று நம் முன்னோர் எண்ணியிருப்பார்களா?

தமிழ்ச் சமூகம் நவீன ஆட்சி நிர்வாகத்தின் விளைவாக இன்று அடைந்திருக்கும் நலன்கள் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், காமராஜர், அண்ணா போன்ற தொலைநோக்கும் நேர்மையும் மிக்க ஆட்சியாளர்களால் மட்டும் நாம் அடைந்தது அல்ல, நாட்டின் மீதும் மக்களின் மீதும் கனவுகளும் கரிசனமும் கொண்ட அரசு அலுவலர்களும் சேர்ந்தே அதைச் சாத்தியப்படுத்தியிருக்கின்றனர். நம்முடைய ஆட்சிமுறையைக் கண்ணியப்படுத்தியிருக்கின்றனர்.

ராம மோகன ராவ் வீட்டிலும் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அறையிலும், துணை இராணுவப் பாதுகாப்போடு வருமான வரித்துறையினர் சோதனையிட்டபோது, தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நன்னுடைய அறையில் மௌனமாகப் அமர்ந்திருந்தார். அன்று மாலை இது குறித்து எதுவும் பேசாமல் மௌனமாக வெளியேறினார் எனும் செய்தி தமிழக அரசியலும் அரசு நிர்வாகத் துறையும் இன்று வந்தடைந்திருக்கும் மோசமான இழிநிலையின் வெளிப்பாடு.

சோதனைச் செய்தி வந்த அடுத்த நிமிடம் கொந்தளித்தார் வங்க முதல்வர் மம்தா பானர்ஜி. "ஒரு மாநிலத்தை ஆளும் தலைமை அலுவலகத்தில், மாநில அரசுக்கு எந்தத்தகவலும் தெரிவிக்கப்படாமல், மத்தியப் படைகள் சூழ, இப்படி ஒரு சோதனையை மோடி அரசு நடத்துகிறது என்றால், அது கூட்டாட்சி முறை மீதான தாக்குதல்" என்றார் மம்தா.

உண்மை.

கூட்டாட்சி முறை மீதான தாக்குதலாகவே இதை நானும் பார்க்கிறேன். "ஆனால், இப்படி ஒரு மாநில அரசுக்கு எப்படி முன்கூட்டி தகவல் அளிக்க முடியும்? அதுதானே இப்படிப்பட்ட ஒருவர் கையில் மாநில நிர்வாகத்தின் சாவியைக் கொடுத்திருக்கிறது? நினைவில் வையுங்கள், ராம மோகன ராவ் தலைமைச் செயலாளர் மட்டும் அல்ல, மாநிலத்தின் ஊழல் கண்காணிப்பு ஆணையராகவும் இந்த அரசு அவரை வைத்திருந்தது" என்கிறார்கள் வருமான வரித்துறை அதிகாரிகள்.

மறைமுகமாக அவர்கள் கேட்ட கேள்வி இதுதான். "இவர்கள் எல்லோரும் ஒரே கூட்டம்தானே?"

தமிழர்களுக்கு எவ்வளவு பெரிய வெட்கக்கேடு இது! ஒருகாலத்தில் நாட்டிலேயே முன்னோடியாக மாநிலங்களின் சுயாட்சிக்கான வலுவான குரலாகத் திகழ்ந்த மாநிலம்.

இன்று தன்னுடன் சேர்த்து, ஏனைய மாநிலங்களையும் சுயாட்சி தொடர்பில் பேச இயலாத நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

அ.தி.மு.க. அரசு இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஏனென்றால், மாநில உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைத் தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திடமே அளித்திருக்கிறார்கள்.

ராம மோகன ராவ் மீதான குற்றச்சாட்டுகள் எளிமையாகக் கடக்கக் கூடியவை அல்ல. ரூ.134 கோடி கைப்பற்றப்பட்ட ஒப்பந்ததாரர் சேகர் ரெட்டி, ஆட்சியாளர்களின் ஊழல்களுடனான தொடர்பை மாற்றும் வேலையிலும் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறது வருமான வரித்துறை.

சேகர் ரெட்டியிடம் நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்ச்சியாகவே ராம மோகன ராவ் சிக்கியிருக்கிறார் என்றால், என்ன அர்த்தம்? சமூகவிரோதிகளுடனான உறவில் தலைமைச் செயலாளர் இருந்திருக்கிறார் என்றல்லவா ஆகிறது? இது பற்றி ஒரு வார்த்தை பேசாமல், சோதனை நடந்த மறுநாள் தலைமைச் செயலாளர் பதவியிலிருந்து ராம மோகன் ராவை நீக்கி, காத்திருப்போர் பட்டியலில் வைத்துவிட்டு புதிய தலைமைச் செயலாளரைத் தமிழக அரசு தேர்ந்தெடுக்கிறது என்றால் என்ன அர்த்தம்? ராம மோகன ராவ் மீதான குற்றச்சாட்டுகள் முகாந்திரமற்றவை அல்ல என்றல்லவா ஆகிறது?

வெளிப்படையாகவே எதிர்க்கட்சிகள் "ராம மோகன ராவ் ஒரு அதிகாரத் தரகர் ஆட்சியில் மட்டும் அல்லாது ஆளுங்கட்சிக்குள்ளும் ஒரு அதிகாரத் தரகராக அவர் கரம் நீண்டிருக்கிறது" என்று முன்பே குற்றஞ்சாட்டியிருக்கின்றன.

எல்லாவற்றையும் மீறியே ராம மோகன ராவைத் தலைமைச் செயலாளராக வைத்திருந்தது அ.தி.மு.க. அரசு.

தமிழகத்தின் தலைமைச் செயலாளரானவர் கிட்டத்தட்ட 18 இலட்சம் பேரைக் கொண்ட அரசு ஊழியர் படையின் தலைவர். இப்படி ஒரு வரைத் தலைமைப் பொறுப்பில் அமர்த்தி, அவர் மீதான குற்றச்சாட்டுகளைப் புறந்தள்ளி அவருடைய பதவியைப் பாதுகாத்ததன் வாயிலாக, அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு கொடுத்துவந்த சமிக்ஞை என்ன?

சென்னையிலிருந்து 1700 கி.மீ. தொலைவில் இருக்கிறது கொல்கத்தா. மம்தா உடனே கொந்தளிக்கிறார்.

சோதனையிடப்பட்ட ராம மோகன ராவ் அறையிலிருந்து சில அடிகள் தள்ளியிருக்கும் தன்னுடைய அறையில் உட்கார்ந்திருந்த பன்னீர்செல்வத்துக்கு இந்நடவடிக்கை தொடர்பில் பேச ஒரு வார்த்தை இல்லை என்றால், அதை எப்படிப் பொருள் கொள்வது? ஊழல் வழக்கில் நீதிமன்றத்தால் குற்றம் நிரூபிக்கப்பட்டு தீர்ப்புக்குள்ளாக்கப்படும்போதே அதை எதிர்த்து, ஊரையே ஸ்தம்பிக்க வைக்கும் இயல்புடைய அ.தி.மு.க.வினர், அவர்களுடைய அரசின் கோட்டையே முற்றுகையிடப்படும்போது வெளிப்படுத்தும் அசாத்தியமான மௌனத்தை என்னவென்று பொருள் கொள்வது?

நம்மை நாமே ஆண்டு கொள்கிறோமா, ஏமாற்றிக் கொள்கிறோமா? அறம் கேள்விகேட்கிறது. தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது. பேசுங்கள் பன்னீர்செல்வம்!

த ஹித்து

மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்

"இனி, வாரம் ஒரு முறை பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறேன்" என்று 2011ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்ற ஜெயலலிதா சொன்னார். ஆனால், அவர் வார்த்தைகள் காற்றில் கரைந்துதான் போயின. ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதிகபட்சமாக அவர், ஐந்து முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்து இருப்பார்... அவ்வளவுதான். வரலாற்றைக் கொஞ்சம் ஊடுருவிப் பார்த்தோமானால், அவர் தொடக்கக் காலத்தில் இவ்வாறாக இல்லை. ஆம்... ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய நட்பு பாராட்டி இருக்கிறார். அப்போது, பல அதிகார மையங்களைத் தாண்டியெல்லாம் இல்லை... வெகு சுலபமாக அவரைச் சந்திக்க முடிந்து இருக்கிறது. அவரும் மனம்விட்டுத் தன் சொந்தப் பிரச்சினைகளைக் கூடப் பகிர்ந்து இருக்கிறார். ஏன்? ஒரு வார இதழ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க

கைத்தறிக் கண்காட்சி நிகழவில் மா.பொ.சிவஞானம், "சினிமா நட்சத்திரங்கள் தேச நலன் கருதி கைத்தறிப் புடைவைகளைத்தான் உடுத்தவேண்டும். தான் உடுத்துவது மட்டுமல்லாமல் தன் ரசிகர்களுக்கும் இதையே பரிந்துரைக்க வேண்டும்" என்று பேசி இருக்கிறார். இலை முன்

புடைவைகள் கூட விற்று இருக்கிறார்!

ஜெயலலிதாவுக்குப் புடவை விற்கத், தெரியுமா...?

கோவையில் நடைபெற்ற பவங்களைக் கட்டுரையாக எழுதுவது. இதற்காக அவர்கள் தேர்வுசெய்த பிரபலம் ஜெய லலிதா...!

இதை ஜெயலலிதாவிடம், அந்த பத்திரிகையின் நிருபர் திரைஞானி சொன்னவுடன், ஜெ. கேட்ட கேள்வி, "சரி நான் வருகிறேன்.... ஆனால், எனக்கொரு சந்தேகம். என்னை ஏன் இதற்காகத் தேர்வு செய்தீர்கள்...?" என்பதுதான்.

இதுதான் காரணமா என்றெல்லாம் தெரியாது. ஆனால், திரைஞானி ஒரு பதிலைச் சொல்லி சமாளித்து இருக்கிறார். அந்தப் பதில் இதுதான், " 'கைத்தறிப் புடைவைகளைத்தான உடுத்த வேண்டும்' என்று சொன்னவர் பெயர் சிவஞானம். நீங்கள் குடியிருக்கும் தெருப்பெயர் சிவஞானம் தெரு. அதனால்தான்...!"

ஜெ. சிரித்தபடி... "சரி... தெருத் தெருவாகத்தான் விற்க வேண்டுமா..." என்று தயக்கத்துடன் கேட்க, அதற்கு திரைஞானி, "தெருத் தெருவாகக் கூவி விற்க வேண்டும் என்பதில்லை. தெரிந்தவர்கள் யாருக்காவது விற்றால் போதும்" என்றிருக்கிறார்.

ஜெயலலிதா கைத்தறிப் புடைவை உடுத்திக்கொள்ள... ஒரு மூட்டை கைத்தறித் துணிகளுடன், அவர்கள் புடைவை விற்கச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்ற இடம் அந்தச் சமயத்தில் ஜெவுக்கு நெருக்கமாக இருந்த எழுத்தாளர் சிவசங்கரி வீடு.

ஏதோ ஒரு கட்டுரைக்காகத்தானே செல்கிறோம் என்றில்லாமல்... புடைவைகள் குறித்து முழுவதுமாகத் தெரிந்துகொண்டு, "இது கோயம்புத்தூர் காட்டன், இது காஞ்சிபுரம் இது கந்தவால் இது வெங்கடகிரி..." என்று ஒவ்வொரு புடைவையின் சிறப்புக் குறித்தும் விளக்கி இருக்கிறார். இது குறித்து திரைஞானி, "ஒரு காரியத்தில் ஈடுபட்டால் அதைப்பற்றி முழு விபரங்களையும் தெரிந்துகொண்டு இண்டலெக்ஸுவலாக நடந்துகொள்வார்..." என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இதுபோல இன்னொரு சம்பவமும் இருக்கிறது. பாலா என்ற பத்திரிகையாளர் ஒரு திரைப்பட படப்பிடிப்பு நடக்கும்போது, ஜெயலலிதாவை பேட்டிகாணச் சென்றிருக்கிறார். இவர் கேட்ட கேள்விகளுக்கு... ஜெ.. சுவாரஸ்யமாக பதில் சொல்லிக்கொண்டிருக்க... அப்போது அந்தப் படத்தின் கதாநாயகன் அந்த இடத்துக்கு வந்திருக்கிறார். பாலா தயக்கத்துடன் அங்கிருந்து எழ... அதற்கு ஜெயலலிதா, "ஏன் எழுகிறீர்கள்... இப்போது நீங்கள் என் கெஸ்ட்... யாருக்காகவும் எழுந்திருக்கத் தேவையில்லை" என்றிருக்கிறார். இதைப் பின்னாளில் பாலா, தான் எழுதிய ஒரு கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார்.

இதையெல்லாம் படிக்கப்படிக்க உண்மையில் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் 200இற்கும் மேற்பட்ட வழக்குகளைப் போட்ட ஜெயலலிதாவா இது...? 2001ஆம் ஆண்டு பத்திரிகையாளர்களை ஓடஓட விரட்டித் தாக்கிய ஜெயலலிதாவா இது...?

ஹ்ம்... பெருமூச்சு விட்டுக்கொள்ள வேண்டியது தான். காலமும், அது தந்த பதவியும்... பதவி தந்த அதிகாரமும் ஒரு மனிதனை இவ்வளவு இறுக்கமாகவாஆக்கும்...? ஆம்... இவரை ஆக்கி இருக்கிறது! இப்போது புடைவை எல்லாம் விற்க வேண்டாம்தான். அது ஒரு முதல்வரின வேலையும் இல்லை தான். ஆனால், தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளின் போதாவது. ஊடகவியலாளர்களைச் சந்தித்து இருக்கலாம்.

சந்தியாவுடனான சண்டை!

சரி வாருங்கள்... விட்ட இடத்துக்கே செல்வோம்....! ஆறாவது அத்தியாயத்தில், இனி நடிப்புதான் தன் எதிர்காலம் என்று அம்மு முடிவு செய்துவிட்டார் என்று பார்த்தோம் தானே? என்னதான் நடிப்பு என்று முடிவு செய்துவிட்டாலும், படிப்பின் மீதான காதல் அவரது ஒவ்வோர் அணுவிலும் இருக்கத்தான் செய்திருக்கிறது. அதை அவரால் கைவிட முடியவில்லை. அந்தச் சமயத்தில், அவருக்கு வழிகாட்டியாக இருந்தது, ஆங்கில இலக்கியங்கள்தான். ஆம், படப்பிடிப்பு தளத்தில், ஜெயலலிதாவை மேக்கப் இல்லாமல்கூட பார்க்க முடியும். ஆனால், அவரது கரங்களில் புத்தகம் இல்லாமல் பார்க்க முடியாது.

பாடகாலையும், அவர் படித்த ஆங்கில இலக்கியங்களும் அந்தச் சமயத்தில் அவருக்கு இன்னொன்றையும் கற்றுத்தந்து இருந்தது. அது, தேவையற்ற போலி மரியாதைகளைத் துறப்பது...! ஆனால், வெற்று மரியாதைகளால் கட்டமைக்கப்பட்ட திரைத்துறைக்கு இது உதவாதுதானே...?

'ஆயிரத்தில் ஒருவன்' படப்பிடிப்பு. ஜெயலலிதா தன்னுடைய பகுதி படப்பிடிப்பு முடிந்ததும், தளத்தில் அமைதியாக நாற்காலியில் கால்மேல் கால்போட்டு அமர்ந்து புத்தகம் படித்து இருக்கிறார். எம்.ஜி.ஆர். வந்ததைக்கூட அவர் கவனிக்காமல், மொத்த கவனத்தையும் புத்தகத்தில் குவித்து இருக்கிறார். இதைப் பார்த்தவுடன் தளத்தில் இருந்த மூத்த கலைஞர்களுக்குச் சங்கடமாக ஆகிவிட்டது. அவர்கள் சந்தியாவை அழைத்து, "சந்தியா... அம்முவுக்குப் படப்பிடிப்புத் தளத்தில் சீனியர்கள் முன்பு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொடு..." என்று கடிந்துகொண்டிருக்கிறார்கள்.

சந்தியா, அம்முவிடம் இதைச் சொன்னவுடன்... அம்மு கொதித்து எழுந்துவிட்டார். "ஏன் இந்த வெற்று மரியாதைகள் எல்லாம்...? எனனால் இதுபோன்ற வெற்றுச் சட்டங்களுக்கு கீழ்படிய முடியாது. அதற்கு கீழ்படிய வேண்டுமென்றால், என்னால் இனி படப்பிடிப்புக்குச் செல்ல முடியாது" என்று கடிந்திருக்கிறார். சந்தியா நிகழ்த்திய ஒரு நீண்ட போராட்டத்துக்குப் பின்பே அம்மு இதற்குச் சம்மதித்து இருக்கிறார்...!

இதைப் படிக்கும்போது, ஜெயலலிதா 'வானத்தின் முன்பு' காஷ்மோராவாகப் படுத்து வணங்கும் அமைச்சர்கள் உங்கள் நினைவுக்கு வந்தால், அதற்கு நான் பொறுப்பல்ல...!

(தொடரும்)

பாலங்களைக் கட்டுவதற்குப் பதிலாக சிலர் சுவர்களை அமைத்து விடுகிறார்கள்

— ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

நரையன் நாற்பது செங்காரி முப்பது

கிராமத்துப் பழமொழிகளின் தத்துவம் மிகவும் கனதியானவை. அவை கூறி நிற்கும் பொருள் நம் வாழ்வியலுக்கு உதவக்கூடியவை.

நம் மூதாதையர்கள் பழமொழிகளின் பொருள் உணர்ந்து அதன் வழியில் வாழ்ந்தனர். ஆனால் இப்போதெல்லாம் அந்நிலைமை இல்லை.

புதிய தலைமுறையில் பழமொழி என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதாக நிலைமை மாறிற்று.

எனினும் நம் பழந்தமிழாம் தமிழ் மொழியின் பெருமையில் பழமொழிக்கு முக்கியமான பங்கு உண்டென்பதால், பழமொழி பற்றி நம் இளம் சந்ததியினர் கவனம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவை ஒருபுறம் இருக்க, நரையன் நாற்பது செங்காரி முப்பது என்றொரு பழமொழி நம் கிராமத்து வழக்கில் உண்டு. இங்கு நரையன் என்பதும் செங்காரி என்பதும் எருது மாடுகளைக் குறிக்கும்.

நரையனும் செங்காரியும் ஒரே தரம் கொண்டவையாக இருந்தாலும் ஒன்றின் விலையைக் கூட்டி மற்றையதன் விலையைக் குறைத்துக் கூறுவதன் மூலம் இரண்டு மாடுகளுக்கும் சரியான விலை நிர்ணயம் செய்துள்ளதான நம்பிக்கையை ஏற்படுத்துவதுதான் நோக்கம்.

உண்மையில் இரண்டு மாடுகளினதும் விலை தலா முப்பது ரூபாயாக இருந்த போதிலும் நரையனுக்கு நாற்பது என்றும் செங்காரிக்கு முப்பது என்றும் கூறுவதனூடாக வாங்குபவரைத் திருப்தியடையச் செய்வதுடன் மறுவார்த்தை பேசாமல் தடுப்பது ஒரு நோக்கம்.

அடுத்தது, மாட்டை வாங்குபவர் நரையனை நாற்பதில் இருந்து முப்பது ஆக்குங்கள் என்று கேட்பார். இச்சந்தர்ப்பத்தில் இரண்டு மாடுகளையும் 30 ரூபாய் என்ற சமவிலையில் விற்றுவிட முடியும்.

இதற்காகவே இவ்வாறான யுக்தி கையாளப்பட்டது. அது சரி; நரையன் நாற்பது, செங்காரி முப்பது என்ற பழமொழி இப்போது எதற்கானது என்று நீங்கள் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் எல்லாம் காரணத்தோடுதான். அடுத்த ஆண்டின் முற்பகுதியில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிவரவிருக்கின்ற புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையையும் தரப்போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அப்படியிருந்தும் வெளிவரவிருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அமுலாக்குவது என்று தமிழ்த் தரப்பு முடிவு செய்து விட்டது.

இவ்வாறு முடிவு செய்தாலும் அதனை தமிழ் மக்கள் ஏற்க வேண்டுமல்லவா? இதனை ஏற்கச் செய்வதற்கானதுதான் நரையன் நாற்பது செங்காரி முப்பது என்ற திட்டம்.

ஆம், அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் என்ற ஒன்றை அரசியலமைப்புக்குள் செருகுவது; இதனை தமிழ்த் தரப்புக்கள் எதிர்ப்பது; தமிழ்த் தரப்புக்கள் எதிர்ப்பதால், அதனை நீக்குவது.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை நீக்குவதாக அறிவிக்கப்பட்டதால், ஏனைய சட்டமூலங்களை தமிழ்த் தரப்புக்கள் ஏற்றாக வேண்டும். அதுவே நீதியானது என்ற (போலி) நியாயப்பாட்டைத் தோற்றுவிப்பது.

ஆக, வலிந்து ஒரு சட்டமூலத்தை நுழைத்து பின்னர் தமிழ்த் தரப்பு அதனை எதிர்ப்பதாகக் காட்டி, அந்த எதிர்ப்புக்கு மதிப்புக் கொடுத்து அந்தச் சட்டமூலத்தை நீக்குவதாக வெளிப்படுத்திவிட்டு,

நிறைவேற்ற வேண்டியதை நுட்பமாக நிறைவேற்றுவதுதான் உள்நோக்கம்.

இந்த நோக்கத்தை சொல்வதற்காகத்தான் நரையன் நாற்பது செங்காரி முப்பது என்ற பழமொழியை நினைவுபடுத்தினோம்.

வடக்கு- கிழக்கில் ஏராளமான பௌத்த தொல்பொருள் இடங்கள்

பாதுகாக்க நடவடிக்கை— ஜனாதிபதி

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏராளமான தொல்பொருள் ரீதியில் பெறுமதி மிக்க பௌத்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள் இருப்பதாகவும் அவற்றை பாதுகாக்கப்பதற்கு சிவில் பாதுகாப்புப் படையினரை அமர்த்தவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள பௌத்த தொல்பொருள் இடங்களை தமிழர்களும் முஸ்லிம்களும்இணைந்து அழித்து வருவதாக பொதுபல சேனா உட்பட சிங்கள பௌத்த பேரினவாத அமைப்புக்கள் ஜனாதிபதியிடம் நேரில் சந் தித்து நேற்று முன்தினம்முறை யிட்ட நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில், சங்கைக் குரிய எல்லாவல மேதானந்ததேரர், கலகொட அத்தே ஞானசார தேரர், நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அமைச்சுக்களின் செயலாளர்கள், தொல் பொருள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க உள்ளிட்ட அதிகாரி களும் கலந்துகொண்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத் தளங்களைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டம் அவசியம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (இ-3-10)

நிலைபேறான யுகத்திற்கான மூன்றாண்டு கால அழைப்பு

தமிழ்பேசும் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை

(கொழும்பு)

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் அமுலாக்கும் வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் தமிழ்பேசும் பிரதேச மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவிருப்பதாக குறிப்பிட்டதுடன் இதன் பெயர் "நிலைபேறான யுகத்திற்கான மூன்றாண்டு கால அழைப்பு" வேலைத்திட்டம் என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த வேலைத்திட்டத்தின் தேசிய வைபவம் ஜனவரி 8ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வறுமை ஒழிப்பை நோக்காகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இத்தகவல்களை அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தர்ம சிறிபண்டார ஏக்கநாயக்க கருத்து தெரிவிக்கையில், இது ஜனாதிபதியின் பதவியேற்பு ஆண்டு நிறைவை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சியல்ல. மாறாக மக்களின் நன்மையை நோக்காகக் கொண்டதென தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதியுடன், இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றன. இந்த "நிலையான அபிவிருத்தி யுகம் மூன்றாண்டு கால ஆரம்பம்" எனும் தொனிப்பொருளில பல்வேறான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுகள் ஜனவரி 4ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 8ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலும், 19ஆம் திகதி கண்டி- குண்டசாலையிலும், 25ஆம் திகதியன்று முல்லைத்தீவிலும் ஆரம்பித்து வைக்கப்படும்.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அம்பாறை, அக்கரைபற்று ஆகிய இடங்களிலும் பெப்ரவரி 9ஆம் திகதியன்று ஹற்றன்னிலும் பல்வேறான வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வறுமை ஒழிப்பு எனும் தொனிப்பொருளில், 15 ஆயிரம் கிராமங்களை இனங்கண்டு, அக்கிராமங்களில் 5 ஆண்டுகளில் வறுமையை இல்லாமல் செய்வதற்கான செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

2030 ஆம் ஆண்டை நோக்கிய இந்த வேலைத் திட்டத்தில் 17 தொனிப் பொருள்களுக்கான இலக்குகள் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதியன்று குறிப்பிடப்படும்என்றார். (இ-3-10)

சுதேச மருத்துவம் சார் கற்கை நெறிகள்

சுதேச மருத்துவம் சார் (சித்த/யுனானி/ஆயுர் வேதம் /ஹோமியோபதி/அக்கு பஞ்சர்/பாரம்பரிய மருத்துவம்) கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள் தவிர்ந்த ஏனைய கற்கை நெறிகளை வழங்கும் நிறுவனங்கள் அனைத்தும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் பதிவு பெற்றே கற்பித்தலையும் அதற்கான சான்றிதழ்களையும் வழங்க முடியும். அவ்வாறன்றிவழங்கப்படும்கற்கை நெறிகளுக்கான சான்றிதழ்கள் ஆயுர்வேத சட்ட இல.31/1961 இன் கீழ் இலங்கையில் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படாதவை ஆகும்.

சில தனியார் கல்வி நிறுவனங்கள்இவ்வாறானகற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளமைமதுகவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.எனவே இது தொடர்பில் கற்கை நெறிகளை தெரிவு செய்வதற்கு முன்னர் அவற்றின் அங்கீகாரம் தொடர்பில் ஆயுர்வேத திணைக்களத்தில் உறுதிசெய்து விண்ணப்பிப்பது விண்ணப்பதாரிகளின் நேர, பண விரயத்தினை தவிர்க்க உதவியாக இருக்கும்.

(ஆயுர்வேத திணைக்கள இணையத்தளமுகவரி www.ayurveda.gov.lk என வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (இ

ஒளிவிழா

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலைய ஒளிவிழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஜெயச்சந்திரம் கலையரங்கில் இடம்பெறும்.

நிலைய உப தலைவர் இ.கருணாகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறின் மன்மதநாயகம் கலந்து கொள்வார். (இ-3-60)

கருத்தரங்கு

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழ் அறிஞர்களில் தலைமகனாகத் திகழ்கின்ற பேராசிரியர் க.கைலாசபதியின் 34 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகரும், எழுத்தாளருமான க. சிவகரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் ஈழத்தில் இந்து அடிப்படைவாதம் என்ற தலைப்பில் நினைவுரையை த. ஸ்ரீபிரகாஸ் ஆற்றவுள்ளதுடன், கருத்துரைகளை ச. சத்தியதேவன், க.கணேஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ)

கலைவிழா

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் விடுதி, முன்பள்ளி என்பவற்றின் கலைவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பகல் விடுதியில் இடம்பெறும்.

சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதித் தலைவர் க.பரமானந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், டாக்டர் திருமதி ஜெ.ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி தம்பி ஐயா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

❖ எனது வீர இளைஞர்களே! உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே! செயல் புரியத் தொடங்குங்கள். தேச முன்னேற்றம் என்ற தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். பெயர், புகழ் போன்ற எந்த அற்ப விடயத்திற்காகவும் நீங்கள் நின்று திரும்பிப் பார்க்க வேண்டாம். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்து விட்டு வேலை செய்யுங்கள்.

❖ முதலில் ஆண்மை பொருந்திய மனிதர்களை உருவாக்குங்கள். ஆண்மை பொருந்திய மனிதர்களே நமக்கு இப்போது தேவை. சிரத்தை இல்லாவிட்டால் எப்படி ஆண்மை வாய்ந்தவர்களை உருவாக்க முடியும்.

❖ எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நீங்களும் விழித்திருங்கள். மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன்னால் மனிதப் பிறவியினால் பெறுவதற்கு உரிய பெரிய நன்மையை அடையுங்கள். எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

யாழ். கல்வி கோட்ட தெரிவு செய்யப்பட்ட கரையோர பாடசாலைகளுக்கிடையிலான

பெண்களுக்கான உதைபந்தாட்டம்; சம்பியனானது புனிதர் சாள்ஸ் ம.வி.

புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய அணி

நாவாந்துறை றோ.க. அணி

வடமாகாணத்தில் கல்வியோடு சேர்ந்து விளையாட்டுத்துறையும் பின்னோக்கி சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் உதைபந்தாட்டத் துறையில் அதுவும் பெண்களுக்கான உதைபந்தாட்டத்துறையில் ஒரு மைல்கல்லாக புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய கல்விப்பணியில் 14-வது ஆண்டு நிறைவில் பழைய மாணவர்கள் சங்கத்தினால் யாழ். கல்விக்கோட்டகரையோர தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 17 வயது பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை குறிப்பிடலாம்.

அப்பாடசாலையின் பழைய மாணவர் அமரர் பெகாமிள் நிக்சன் ஞாபகார்த்த சுற்றுப்போட்டியை இப் பாடசாலையின் அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான திருமதி ஜே.கிளிஸ்ரபெல்லும் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர்களான ஆசிரியப் பணியிலுமுள்ள யூடா சதீஸ்குமார், அ.சிறீ சுதாகரன், ரெஜிஸ் நியூட்டன் ஆகியோரின் நெறிப்படுத்தல்களில் நடைபெற்றது.

நாவாந்துறைறோமன் கத்தோலிக்க பாடசாலை, புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம், புனிதர் ஜேம்ஸ் வித்தியாலயம் மற்றும் சென்றோக்ஸ் வித்தியாலயம் என்பன உதைபந்தாட்ட வளம் இல்லாநிலையிலும் யைதான இடவசதி இன்றியும் போதிய பயிற்சி இன்றியும் இச்சுற்றுப் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்டமை ஆரோக்கியம் தரும் விடயமாகும்.

முதலில் லீக் முறையில் நடத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியானது அதிக புள்ளிகள் பெற்று முதல் இரண்டு இடங்கள் பெற்ற அணிகளான புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை என்பன இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

ஏற்கனவே பல கள அனுபவம் பெற்ற நாவாந்துறை றோமன் கத்தோலிக்க அணியினர் இறுதிப் போட்டிக்கு மைதானத்துள்ளே அணி வகுத்த காட்சியானது சர்வதேச உதைபந்தாட்ட அணி வீராங்கனைகளாக காட்சி தந்ததாக இறுதிப்போட்டியில் கண்டுகளித்த ஆர்வலர்கள் முணுமுணுத்ததையும் கேட்க முடிந்தது.

புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய அணியினரோ உடற்கல்வி போதனாசிரியர் இல்லாநிலையி லும் கள அனுபவம் இல்லாமலும் போதிய வளம் இன்றியும் இப்பாட சாலையின் பழைய மாணவரும் ஊரெழு றோயல், வி.கழகம், சென். றோக்ஸ் வி.கழகங்களின் முன்னாள் உதைபந்தாட்ட அணி வீரரும் முன்னாள் யாழ் லீக் மற்றும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட தெரிவு அணி வீரராகவும் விளையாடி அனுபவம் பெற்ற பயிற்சியாளர், அ. அருள் பிரகாசின் பயிற்சிகளோடு களம் இறங்கியது குறிப்பிடத்தக்கது.

யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் றீ.சண் தயாளன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இவ் இறுதிப்போட்டி நிகழ்வின் போது, நாவாந்துறை றோ. கத்தோலிக்க பாடசாலை அணியினரும் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய அணி யினரும் விறுவிறுப்புடன் மோதிக் கொண்டனர். இடைநடுவே மழை குறுக்கிட்ட போதும் ஆட்டத்தை இடை நிறுத்தாது சமராடியது. இரு அணி வீரர்களின் மன உறுதியை பாராட்டியே ஆகவேண்டும்.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியின்போது இடைவேளை வரை எதுவித கோல்களும் போடாத நிலையில் இறுதி மூன்று நிமிடத்தில் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலய அணியினர் ஒரு கோலை பதிவு செய்தனர். கூடுபிடித்த ஆட்டமானது, இவர்களுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபித்து இறுதி நிமிடத்தில் நாவாந்துறை றோ.க.அணியினர் ஒருகோலை பதிவு செய்து சமன் செய்தனர்.

பின்பு சமநிலை துவிப்பு உதை மூலம் அதிக கோல்களை பெற்ற புனிதர்சாள்ஸ்மகாவித்தியாலய அணியினர் இச் சுற்றுப்போட்டியின் சம்பியனாக முடிசூடிக்கொண்டனர். (கு)

வவுனியா யங்ஸ்டாரை வீழ்த்தியது முல்லை.-கிளிநொச்சி இணைந்த அணி

(முள்ளியவளை)

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டித் தொடரில் கடந்த 18 ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வவுனியா யங்ஸ்டார் அணியை எதிர்த்து விளையாடிய முலலைத்தீவு, கிளிநொச்சி இணைந்த அணி 27 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு, கிளிநொச்சி அணியினர் 27.3 பந்துப் பரிமாற்றங்களுக்கு முகம்கொடுத்து அனைத்து இலக்குகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வணியில் அதிகபட்ச ஓட்டங்களாக சசிதரன் 47, அஞ்சயன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். வவுனியா அணி சார்பாக பந்து வீச்சில் சிறந்த பெறுமதியாக ஜனசன் 9.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளை கைப்பற்றினார். பின்னர் 107 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் இலகுவான இலக்கோடு துடுப்பெடுத்தாட களமிறங்கிய வவுனியா அணியினர் அஞ்சயனின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாது திணறினர்.

இறுதியில் 19 பந்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுமே முகம்கொடுத்து அனைத்து இலக்குகளையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

இதில் வவுனியா அணி சார்பாக அதிக பட்ச ஓட்டங்களாக இரட்ணகுமார் 17, ராஜ்குமார் 15 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி இணைந்த அணி சார்பாக பந்துவீச்சில் சிறந்த பெறுமதியாக அ.அஞ்சயன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்தினை வீசி 18 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.

இதன்மூலம் வவுனியா அணியை எதிர்த்து ஆடிய முல்லைத்தீவு, கிளிநொச்சி இணைந்த அணியினர் 27 ஓட்டங்களினால் வெற்றியீட்டினர். (க-302)

மகாத்மா-நாமகள் வெற்றி பெற்றது

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 19.12.2016 அன்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் மகாத்மா வி.க. வெற்றி பெற்றது. நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சென்.லூட்ஸ் விளையாட்டு க் கழகத்தை எதிர்த்து நாமகள் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் நாமகள் வி.க. வெற்றி பெற்றது. இரு போட்டிகளும் தண்ட உதை மூலமே வெற்றி தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

இன்றைய போட்டி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர்கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட காலிறுதிப் போட்டியில் இன்று சனிக்கிழமை இரவு 7.45 மணிக்கு உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

ஆதிசக்தி - யங்கம்பன்ஸ் பரபரப்பான ஆட்டம் சமநிலையில்

அல்வாய் மனோகரா வி.கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலான 11 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் 21.12.2016 அன்று இடம்பெற்ற சுப்பர் 8 போட்டியில் ஆதிசக்தி அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் சமவலுவுடன் ஆடியது. எவ்வித கோல்களும் பெறப்படாத நிலையில் முதல் பாதியாடடம் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் அணிக்கு தண்ட உதைப்பிலான கோல் வாய்ப்பு. அதனை தவற விட்டார் நிறோஜன். இறுதியாட்ட நேர முடிவில் ஆட்டம் சமநிலையானது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளிகள் பெற்றுக் கொண்டன. (கு)

கொம்மாந்தறை வி.க. கிரிக்கெட் போட்டி

கொம்மாந்தறை இளைஞர்கள் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தி வந்த Northern king premier League மென் பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

அந்த வகையில் 12 over கொண்ட போட்டியில் இணுவில் கலையொளி கொக்குவில் பிரம்படி மற்றும் வடமராட்சி அணிகளான ஞானம்ஸ் ஜங்கரா விளையாட்டுக் கழகங்களும் அரையிறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றிருக்கின்றன. மற்றும் 8 over கொண்ட போட்டியில் கொக்குவில் AB மல்லாகம், ஸ்ரீ முருகன், இணுவில் கலையொளி, மற்றும் கொக்குவில் பிரம்படி ஆகிய கழகங்கள் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருக்கின்றன. இந்த அரையிறுதிப்போட்டிகள் அனைத்தும் 29 ஆம் திகதி மின்னொளியில் நடைபெறும். (கு)

கத்திக்குத்துக்கு இலக்கான வீராங்கனை மூன்று மாதங்கள் ஓய்விலிருக்க வேண்டும்

கத்திக்குத்தில் கையில் காயம் அடைந்த முன்னணி பெண்ணிஸ் வீராங்கனை கிவிடோவாவுக்கு சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அவர் 3 மாதம் விளையாட முடியாது. செக்குடியரசு நாட்டை சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை 26 வயது பெட்ரா கிவிடோவா. இடதுகை வீராங்கனையான கிவிடோவா, கர்ரண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டன் இரண்டுமுறை உட்பட 19 ஒற்றையர் பட்டங்களை வென்றுள்ளார். ரியோ ஒலிம்பிக்கில் வெண் கலப் பதக்கம் வென்று இருக்கும் கிவிடோவா சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் 11 ஆவது இடத்தில் இருக்கிறார்.

செக்குடியரசின் கிழக்கு பகுதியான புரோஸ்டெஜோவ் நகரில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் வசித்து வரும் கிவிடோவாவின் வீட்டுக்குள் காலை வேளை புகுந்த மர்ம மனிதன், மறைத்து வைத்து இருந்த கத்தியால் கிவிடோவாவை சரமாரியாக குத்தினான். இதனை தடுக்க முயன்ற கிவிடோவாவுக்கு இடது கையில் பலத்த காயம் ஏற்பட்டது. குத்திய மர்ம நபர் தப்பிஓடிவிட்டான். அவன் யார்? என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகிறார்கள்.

கத்திக்குத்தில் படுகாயம் அடைந்த கிவிடோவா அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் சேதம் அடைந்து இருந்த அவரது கைவிரல்கள், தசை நார்கள் மற்றும் நரம்புகள் சரிசெய்யப்பட்டன. இந்த அறுவை சிகிச்சை சுமார் 4 மணி நேரம் நடைபெற்றது. அத்துடன் கை அசையாமல் இருக்க நவீன முறையில் மாவுகட்டு போடப்பட்டுள்ளது. கிவிடோவாவின் காயம் குணமடைய குறைந்தபட்சம் 3 மாதம் பிடிக்கும் என்பதால் அவர் அடுத்த மாதம் மெல்பேர்னில் நடைபெறும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க முடியாது. (க)

வடக்கின் பட்...

அமைச்சு மற்றும் மீன்பிடி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் பட்ஜெட் மீதான விவாதம் இடம்பெற்று, இரு அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் வடக்கின் மொத்த பாதீட்டையும் ஏற்குமாறு சபையில் அவைத்தலைவர் கூறினார். இதனை அடுத்து உறுப்பினர்களின் எதிர்ப்பின்றி பட்ஜெட் நிறைவேற்றப்படுவதாக அறிவித்தார்.

சுகாதார அமைச்சு டென்மார்க்கின் நிதியுதவியினை பெற்று பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதோடு கனடா நாட்டில் சர்வதேச சுகாதார மாநாடு ஒன்றையும் நடத்த திட்டமிட்டுள்ளது. விவசாய அமைச்சு காற்றாலை திட்டம், மரம் நடுகை திட்டம் என்பவற்றை கடந்த வருடம் முன்னெடுத்திருந்தது. வடக்கு நீரியல் நிலையை ஆராய்வதற்கென அடுத்த வருடம் யாழில் சர்வதேச மாநாடு ஒன்றையும் விவசாய அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

இதேபோன்று கல்வி அமைச்சும் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த ஐந்தாண்டு திட்டம் மற்றும் பல திட்டங்களையும், மீன்பிடி அமைச்சு போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தியுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண பேரவை செயலகம் ஆகியவற்றுக்கான செலவீன தலைப்பு தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதில் ஆளுநர் செயலகத்திற்கான 59 மில்லியன் மற்றும் 30.9 மில்லியன் ரூபாயும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக்கான 28 மில்லியன் ரூபாயும், மாகாண பேரவை செயலகத்திற்கான 314.2 மில்லியன் ரூபாயுமான செலவீனங்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

கடந்த 24-ம் திகதி நடைபெற்ற அமர்வில் முதலமைச்சர், அமைச்சுக்கள் மற்றும் பிரதம செயலாளர் செலவீனங்கள் தொடர்பிலான விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் முதலமைச்சர் அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 2430.61 மில்லியன், மூலதன செலவீனமாக 301.5 மில்லியனும், பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு மீண்டுவரும் செலவீனமாக 872.78 மில்லியனும், மூலதன செலவீனமாக 393.38 மில்லியனும் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

21 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் முதலமைச்சர் அமைச்சும் மீதான விவாதம் தொடர்ந்திருந்ததோடு விவசாய அமைச்சு மீதான விவாதம் இடம்பெற்றது. இதில் விவசாய அமைச்சுக்கு மீண்டுவரும் செலவீனமாக 983.784 மில்லியனும், மூலதன செலவீனமாக 289.5 மில்லியனுக்கும் அன்றைய தினம் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

மறுநாள் 22 ஆம் திகதி சுகாதார அமைச்சு மீதான விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் சுகாதார அமைச்சுக்கு மீண்டுவரும் செலவீனமாக 5267.45 மில்லியனும், மூலதன செலவீனமாக 786.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. நேற்றைய தினம் கல்வி மற்றும் மீன்பிடி அமைச்சு மீதான விவாதங்கள் இடம்பெற்றன.

இதில் கல்வி அமைச்சுக்கு மீண்டுவரும் செலவீனமாக 9670.371 மில்லியனும், மூலதன செலவீனமாக 666.5 மில்லியனும், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 420.726 மில்லியனும், மூலதன செலவீனமாக 293 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரமும் நேற்று வழங்கப்பட்டது. அனைத்து அமைச்சுக்களுக்கான மொத்த ஒதுக்கீடு 22 ஆயிரத்து 728. 117 மில்லியனாகும்.

வடக்கு மாகாணத்திற்கு 2016ஆம் ஆண்டுக்கான மூலதன செலவாக 8 ஆயிரத்து 818 மில்லியன் வழங்கப்பட்ட போதும் 2017ஆம் ஆண்டுக்கான மூலதன செலவீனமாக 5 ஆயிரத்து 618 மில்லியன் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் இடையில் 3 ஆயிரத்து 200 மில்லியன் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.

இதேபோன்று 2016ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனமாக 16 ஆயிரத்து 174 மில்லியனும், 2017ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனமாக 16 ஆயிரத்து 476 மில்லியனும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டை விட மீண்டுவரும் செலவீனத்திற்காக வழங்கப்பட்ட தொகை இம்முறை அதிகமாக காணப்பட்ட போதிலும் மூலதன செலவீனம் மற்றும் மீண்டுவரும் செலவீனங்களுக்காக வழங்கப்பட்ட தொகையின் ஒட்டுமொத்த அடிப்படையில் 2 ஆயிரத்து 898 மில்லியன் ஒட்டுமொத்தமாக குறைக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண சபையுடன் தொடர்புடைய செலவில், மாகாண சபையுடான செலவு 22 ஆயிரத்து 728 மில்லியன் ரூபாயும், ஏனைய திணைக்களங்களுடனான செலவு 2 ஆயிரத்து 734 மில்லியன் ரூபாயும், மொத்தம் 25 ஆயிரத்து 462 மில்லியன் ரூபாயும் செலவிடப்படவுள்ளது.

இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்று வடக்கு சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள பட்ஜெட் எதிர்வரும் இரண்டு தினங்களுக்குள் அரசியலமைப்பு ரீதியான அங்கீகாரத்தை பெறுவதற்காக வடக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் 2017 ஆண்டுக்கான செலவீனங்களின் எழுத்தாணையை வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு முதலமைச்சர் அறிவிப்பார். அதன பின்னர் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேற்படி புதிய பட்ஜெட் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31-ம் திகதி வரைநடை முறைப்படுத்தப்படும் என அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார். (செ-4)

வாள்வெட்டு இளை...

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாலிநகர் கிராமத்தில் அண்மைய நாட்களாக மதுப் பழக்கத்திற்கு அடிமையான இளைஞர்கள் குழுவின் அடாவடித்தனம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் சம்பவ தினம் வீதியில் நின்று அடாவடித்தனம் புரிந்த அடாவடிக் குழுவினர் மோட்டார் சைக்கிளில் வந்த பிறிதொரு இளைஞருடன் வாய்தர்க்கம் செய்து முரண்பட்ட நிலையில் அவர் மீது வாள் வீச்சையும் மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் பாலிநகர் கிராமத்தில் வசிக்கும் குணபாலசிங்கம் நிருசன் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருவதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

விமான பாகம்...

நாட்டின் கிழக்கு கடல் பகுதியில் விமானத்தின் பாகம் என சந்தேகிக்கப்படும் 15 அடி நீளமான உலோக பொருளொன்று கரையொதுங்கியுள்ளது. மட்டக்களப்பு களுதாவளை கடல் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்தப்பொருள் கரையொதுங்கியுள்ளது.

கடற்கரையை அண்மித்ததாக விமானத்தின் பாகம் என சந்தேகிக்கப்படும் பொருளொன்று காணப்படுவதாக மீனவர்களினால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸாரால் கடற்படை உதவியுடன் குறித்த பாகம் கரைக்கு கொண்டு வரப்பட்டதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தின் பாகம் என கருதப்படும் குறித்த உலோகப் பொருளில் எழுத்துக்கள் காணப்படுகின்ற போதிலும் எந்த மொழி என இதுவரை கண்டறிப்படவில்லை என வும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு பகுதியில் விமானமொன்றின் பாகங்கள் காணப்படுவதாக உள்ளூர் மீனவர்களை மேற்கோள் காட்டி சமூக வலைத்தளங்களில் கடந்த ஓரிரு நாட்களாக செய்திகள் வெளியாகிவந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

ஏ9 நெடுஞ்சாலை...

மாத்திரம், 117 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்துப் பொலிஸாரின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் சாவகச்சேரியில் தென்பகுதியிலிருந்து வந்த 11 பேர் கொல்லப்பட்ட விபத்தும் இந்த எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏ9 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற அதிகளவிலான விபத்துக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்குட்பட்ட பகுதிகளிலேயே இடம்பெற்றுள்ளன என்றும் இந்த தரவுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ் விபத்துகள் பெரும்பாலும் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாலும், மது போதையில் வாகனம் செலுத்தியதாலுமே அதிகளவு இடம்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)

'ஜனாதிபதியிடம்...

தேவைகளை கேட்டறியும் அலுவலகம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் கடந்த ஒருவருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது.

அந்த குறித்த அலுவலகத்தின் சேவைகளை இலகு படுத்துவதற்கென ஒவ்வொரு மாவட்டங்களிலும் அந்த அலுவலகங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த அலுவலகத்தினை முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களிலும் படிப்படியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கில் அதிகமானவர்கள் மக்களின் பிரச்சினைகளை பற்றி பேசுகிறார்களே தவிர அதற்கான நடவடிக்கைகள் எடுத்ததாக தெரியவில்லை. எனவே மக்களின் பிரச்சினைகள் முறைப்பாடுகளை ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியாக நான் இங்கு இருக்கும் காரணத்தால் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறவேண்டிய கடமை எனக்குள்ளது.

அந்த வகையில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதிக்கு சொல்லுங்கள் என்ற பெயரில் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது. அதில் 2 அதிகாரிகள் கடமையாற்றவுள்ளனர். அவர்கள் மும்மொழியிலும் கலந்துரையாடுவார்கள். கிழமையில் ஒரு நாள் நேரடி சந்திப்பும் ஏனைய நாட்கள் முறைப்பாடுகளையும் எழுத்துமூலம் பெற்றுக கொள்ளும் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

எனவே பொதுமக்கள் எந்தவகையான பிரச்சினைகளையும் தெரிவிக்க முடியும், அதை அந்த அதிகாரிகள் பெற்றுக்கொண்டு எனது அனுமதியின் கீழ் அதை நேரடியாக பதிவு செய்வார்கள், பின்னர் குறித்த பிரச்சினைகள் ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டு பிரச்சினைகள் ஆராயப்படுவதன் ஊடாக உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இந்த அலுவலகத்தின் திறப்புவிழா நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களையும் ஜனாதிபதி வழங்கி வைக்கவுள்ளார்.

அத்துடன் மருத்துவச்செலவுக்கென வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பித்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து உதவுதொகை வழங்கவுள்ளார். மேலும் யாழ் மாவட்டச்செயலகத்துடன் இணைந்து அன்றைய தினம் சிரசிங்கமண்டபம் மற்றும் பண்ணை கடற்கரை பகுதியை சூழவுள்ள பகுதிகளில் மரம் நடுகையும் இடம்பெறவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆளுநரின் அதிகாரத்தை குறைக்க வேண்டும் என்ற வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் கருத்து தொடர்பாக ஆளுரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போது, இது ஜனநாயகம் எல்லோரும் அவர்களுக்கு வேண்டியது போல பேச முடியும், அது அவர்களுடைய விருப்பம். அவர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் மக்களுடைய வாக்கை பெற்று அவர்கள் பேசுகிறார்கள். அதனால் இக்கருத்து தொடர்பில் கவனம் செலுத்த தேவையில்லை.

நாட்டில் உள்ள ஒவ்வொரு பகுதிகளிலும் இருந்து பலர் பைத்தியக்காரதனத்தில் பேசுவார்கள் ஆனால் அரசுடைய பணத்தில் தான் அவ்வாறு பேசுகிறார்கள்.

எது எவ்வாறாக இருந்தாலும் நாட்டில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும். மின்சாரமும் வீதியும் அமைத்தால் போதாது தொழிற்சாலைகளை அமைத்து வேலைவாய்ப்புக்களை வழங்கி வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும் என ஆளுநர் தனது பதிலில் தெரிவித்துள்ளார். (செ-9)

வடக்கு சபை...

வடக்கு மாகாணசபையின் பாதீடு மீதான விவாத அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இந்த அமர்வின் ஆரம்பத்தில் பொது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஒன்றை கொண்டுவரவுள்ளதாக கூறி அவைத்தலைவரின் அனுமதியுடன் மேற்படி எதிர்ப்பு தீர்மானத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் சபையில் பிரேரித்தார். இதன் போது முதலமைச்சர் உரையாற்றுகையில்,

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டம் என்ற பெயரில் மத்திய அரசாங்கம் புதிய சட்டமொன்றை கொண்டுவர முனைகின்றது. இந்த சட்டத்தினூடாக மத்திய அரசாங்கம் தான் நினைத்ததை எவ்வாறு செய்யவேண்டும் என அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து நாடு முழுவதுமாக பொருளாதார ரீதியில் தாங்கள் நினைத்ததை செய்ய முயற்சி செய்கின்றனர். இது சம்பந்தமாக சில மாதங்களுக்கு முன்னர் ஒரு சம்பவம் இடம்பெற்றது.

அநுராதபுரத்திலிருந்து செட்டிகுளம் நோக்கி நீர் கொண்டுவருவது சம்பந்தமாக செயற்திட்டம் ஒன்று இருக்கின்றது. அங்கிருந்து நீர் கொண்டுவருவது என்பதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் குறித்த திட்டம் வடமாகாண எல்லைக்குள் வரும்போது அந்த செயல் திட்டம் தொடர்பாக பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் என்னவிதமான விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்பதை நாம் ஆராய வேண்டும். ஆகவே இது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் இருக்கின்றதா? என மகாவலி அதிகார சபையிடம் வினாவினேன்.

அந்தந்த நேரத்தில் அந்தந்த சட்டத்தில் என இருக்கின்றதோ அந்த சட்டத்தின் படி அவற்றை நடைமுறைப்படுத்தலாம் என பதிலளித்தனர். அதன் அர்த்தமானது மகாவலி சபை 1979 ஆம் ஆண்டு வந்தது. ஆனால் 13 ஆவது திருத்த சட்டமானது 1987 ஆம் ஆண்டிலேயே வந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆட்சிக்காலத்தில் நாடு பூராகவும் சில உரித்துக்களையும் அதிகாரங்களையும் மாவிக்க கூடியதாக இருந்தது.

இதே போலவே தான் அனைத்து விடயங்களிலும் மத்திய அரசாங்கம் தான்தோன்றித்னமாக தாங்கள் நினைத்ததை செய்ய வேனடும் என்பதற்காகத்தான் இந்த அபிவிருத்தி சுடத்தையும் கொண்டுவர முனை கின்றனர்.

மாகாண சபைக்கு வர வேண்டிய அதிகாரங்கள் செயற்பாடுகள் போன்றவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடுவது ஏற்புடைய விடயமல்ல. ஆனால் அனைத்து மாகாண சபைகளின் முதலமைச்சர்களை பொறுத்த வரையில் ஒரு ஒற்றுமை காணப்படுகின்றது.

அதே போலதான் ஊவா மாகாண சபையிலும் குறித்த சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அதேபோல நாங்களும் எதிர்க்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஏனெனில் நாங்கள் கீழிருந்து மேல்நோக்கி பணிக்க வேண்டிய தேவையில் இருக்கின்றோம்.

ஆனால் இந்த சட்டமூலம் வருமானால் நாங்கள் மேலிருந்து கீழ் நோக்கி செல்கின்ற தன்மையே காணப்படும். அதிகாரப்பகிர்வின் ஊடாக நாங்கள் தீர்மானங்கள் எடுக்க வேண்டும் அதனை மத்திய அரசாங்கமும் அதனை ஏற்றுக்கொண்டு எங்களுடன் பயணிக்க எதுவாக இருக்க வேண்டும். இந்த சட்ட மூலமும் எங்கள் மீது திணிக்கும் விடயமாகதான் நாங்கள் பார்க்கின்றோம். மாகாண முதலமைச்சர் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனாலும் எனக்கு அது தொடர்பான உத்தியோக பூர்வமான கடிதம் கிடைக்கவில்லை. அத்துடன் குறித்த சந்திப்பு நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டது. எது எவ்வாறு இருப்பினும் நாங்கள் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டத்தை நாங்கள் ஏற்கமாட்டோம் என்ற முடிவை எடுக்கின்றோம் என முதலமைச்சர் தெரிவித்தார். இதனை சபையினர் அனைவரும் ஏற்றிருந்தனர். (செ-4)

அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த இருவர் என்னை மிரட்டினர்

வடக்கு மாகாண சபையில் அனந்தி முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதாக வடக்கு மாகாண சபையின் ஒரேயொரு பெண் உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் பட்ஜெட்டுக்கான அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள், சபை முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர். போராட்டத்தின் முடிவில் முதலமைச்சரினை சந்திப்பதற்கு என்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் ஐந்து பேர் மட்டுமே பேரவை செயலகத்திற்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதற்கு முன்னதாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோரினை செயலகத்தின் முன்பாக உள்ள கொட்டகையில் அமரவைப்பதற்கான அனுமதியை பேரவைச் செயலகத்திடம் கோரியிருந்தேன்.

எனினும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதோடு பொலிஸாரும், கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ளே செல்ல முடியாதவாறு வாசலில் தடுத்து நின்றார்கள். ஆனால் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் சிலர், இன்றையதினம் (நேற்று) செயலகம் முன்பாக வருகை தந்து என்னை அழைத்தனர். அதற்கு நான், மாகாண சபையில் விவாதம் உள்ளது பின்னர் சந்திக்கின்றேன். எனக்கும் உங்களுக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என அவர்களிடம் கூறினேன். அப்போது இருவர் எனக்கு அருகில் வந்து என்னை மிரட்டும் தொனியில் கதைத்திருந்தனர்.

மேலும் நான் அனுமதி கோரியபோது கடமை நிறைவேற்று அதிபர்கள் உள்ளே வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் இன்று (நேற்று), அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சுதந்திரமாக உள்ளே வந்துள்ளனர். இது தவிர விவாதத்தை பார்வையிட நால்வருக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இது அநீதியான சம்பவமாகும். எனக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு இன்னொரு நீதியா? உறுப்பினர் ஒருவருக்குக் கூட பாதுகாப்பில்லாத நிலைதான் உள்ளது என அவைத் தலைவரைப் பார்த்து அனந்தி சாடினார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் அஸ்மின், இது ஒரு பாரதூரமான விடயமாகும், ஒட்டுமொத்த உறுப்பினர்களின் சுறப்புரிமையை மீறும் செயலாகும். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், நான் உள்ளே வருவதற்கு யாருக்கும் அங்கீகாரம் வழங்கவும் இல்லை மறுக்கவும் இல்லை. எனக்கு தெரியாமல்தான் இந்த இரு சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

எனினும் உறுப்பினர் அனந்திக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் வருத்தத்தை தெரிவித்து கொள்கின்றேன். நான் யாருக்கும் சார்பாகச் செயற்படவில்லை என அவைத் தலைவர் கூறினார். (செ-4)

3 ஆயிரத்து 349...

பகுதியில் உள்ள மூன்று குளங்களிலும் மீன் குஞ்சு விட்டுள்ளார். இது எந்த வகையில் சம நிலையாகின்றது? புதுக்குடியிருப்பில் உள்ள விசுவமடு குளம், உடையார் கட்டுகுளம், கரைத்துரைப்பற்றில் உள்ள மடவளசிங்கன் குளம், தண்ணிமுறிப்பு குளம், ஒட்டிசுட்டானில் உள்ள முத்தையன் கட்டுகுளம், மாந்தை கிழக்கில் உள்ள வவுனிக்குளம், துணுக்காயில் உள்ள தெண்ணியன் குளம் என தமிழர்கள் வாழும் பகுதிகளில் உள்ள ஏழு குளங்களில் மட்டுமே மீன்படி அமைச்சர் மீன்குஞ்சு விட்டுள்ளார்.

ஆனால் 3 ஆயிரத்து 33 சிங்கள குடும்பங்கள் மட்டுமே உள்ள பகுதியில் காணப்படும் ஜனகபுர, கலியாண புரவெவ, சம்மல்வெவ என மூன்று குளங்களிலும் மீன்குஞ்சு விட்டுள்ளார். இது தவிர தண்ணிமுறிப்பிலும் சிங்களவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில் அமைச்சர் மீன்குஞ்சு விடுவதில் சிங்களவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றார்.

முல்லைத்தீவில் 3 ஆயிரத்து 349 ஏக்கர் வயல் நிலங்களை சிங்களவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். இந்த நிலையில் அவரகளை வெளியேற்றுவதா? ஆதரிப்பதா? இவ்வாறு தமிழர்களின் நிலங்களும் அங்கு பறி போய் கொண்டு உள்ளன. விகாரைகள் புதிதாக முளைத்து கொண்டுள்ளன எனவும் உறுப்பினர் ரவிகரன் சபையில் சுட்டிக்காட்டினார். (செ-4)

பொருத்து வீடுகள்...

யின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் பேரவை செயலகத்தினது சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்.

பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை என மாகாண சபை உறுதியான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. அந்த தீர்மானம் இன்று நீளவும் உறுதி செய்யப்படுகிறது. மாகாண சபையின் தீர்மானமும் இதுவேயாகும். மற்றைய உறுப்பினர்களுக்கும் இதுவே தீர்மானமாகக் கூறப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன், வட மாகாணத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளது. இந்த நிலையில் தேவையான மக்கள் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என விளம்பரங்கள் ஊடகங்களில் வருகின்றது. எனவே இந்த வீடுகளைப் பெற விரும்பும் மக்கள் விண்ணப்பிக்கலாமே? எனக் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவைத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

வெளிநாடுகளுக்கான தூரித பொதிகள் சேவை
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அனிஸா & கோ (C-6822)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
• வெளிநாட்டு விசா (UK, கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ்) விண்ணப்ப படிவம் (Online form) நிரப்புதல்.
• இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
(C-6756)
தொடர்புகளுக்கு: 0768226236
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

KINGS ELECTRONICS(PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
X-mas விசேட விலைக் கழிவு
10-35% OFF
அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
LED TV'S
Samsung 32" -31900
Hisence 32" -24900
Sony 40" -59999
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -31500
WARRANTY 3 YEARS
SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
TEN YEARS WARRANTY
Sony 5.1 Home Theater
RS 20,900/=
ONE YEAR WARRANTY
SONY
INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=
OPEN 09.00AM TO 08.00PM 365 DAYS
Furnitures
Toys
Electronics
Baby Care
10% OFF
(C-6836)
www.mykings.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(கோம்பஷ் சந்திக்கு அருகாமையில்)

BEACON TEC CITY
தொழில் நுட்பக்கல்லூரியின் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைகளின் பிரபல ஆசிரியர்கள் இணைந்து க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான தொழில்நுட்பவியல் கற்கை நெறிகளுக்கான அனைத்து பாடங்களும் (2017,2018) முழுமையான செயன்முறை விளக்கத்துடன் நடைபெறுகின்றது.
இயந்திரவியல் பொறியியல்
செ.ஜெகநாதன் (தொழில்நுட்பக் கல்லூரி)
குடிசார் இயந்திரவியல்
சி.சிவஜன் (தொழில்நுட்பக் கல்லூரி)
படவரைதல்
அ.அருண்குமார் (மானிப்பாய் இந்துக்கல்லூரி)
இலத்திரனியல்,மின்னியல்
இ.றொபின்சன் (தொழில்நுட்பக் கல்லூரி)
பௌதிகவியல்
த.கிருபாகரன் (யாழ் இந்து மகளிர் கல்லூரி)
இரசாயனவியல்
சு.நந்தா (பிரபல ஆசிரியர்)
உயிரியலும் உயிர் முறைமையியலும்
பொன்.சிவகுமார் (விவசாய திணைக்களம்)
தகவல் தொழில் நுட்பம்
சி.கார்த்திக் (IT Park)
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 01.01.2017
குறிப்பு : ஒரு வகுப்பில் 30 மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள்
BEACON TEC CITY
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (C-6840) 0774873338

IBC தமிழ் விளம்பரங்களுக்கு
உங்கள் பொருட்கள், சேவைகளை லண்டன் IBC தமிழ் தொலைக்காட்சி மற்றும் வானொலியில் விளம்பரம் செய்யவும்.....
இலங்கையில் நடைபெறும் கலை கலாச்சார மற்றும் திருவிழா நிகழ்வுகளை IBC தமிழ் தொலைக்காட்சி மூலம் உங்கள் புலம்பெயர் உறவுகளுக்கு எடுத்துச்செல்லவும் அழையுங்கள்
வி.விஸ்வா
(0094) 0766984771
(0044) 07404232736
skmarketing2016@gmail.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அலர்களது அச்சகத்தில் 24.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.